பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்

கிறவுண்ஸ்

22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூ 2/-

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு

கிறவுண்ஸ்

22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹூ புரட்டாதி மீ 30 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1049 ற. அவ்வல் பிறை 04 (16 – 10 – 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 210

தென் பகுதி நிலைமையை ஆராய

# அரசாங்க எம்.பிக்களின் முக்கிய கூட்டம்

## ஜனதிபதி செவ்வாயன்று கூட்டுகிருர் தவருது பங்குபற்றுமாறு பணிப்பு

கொழும்பு, அக்டோபர் 16

தென்பகுதியில் நிலைமை கட்டுமீறும் அபாயத்தை அடைந்ததை அடுத்து ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நாளை மறுதினம் அதாவது செவ்வாய்க்கிழமை அரசாங்க எம், பிக்களின் முக்கிய கூட்டம் ஒன்றைக் கூட்டுகின்ருர்.

நாட்டின் தற்போதைய நிலையை விரிவாக ஆராய்ந்து சில முக்கிய முடிவுகளை எடுக்கும் விதமாகவே இந்த அவசரக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில இந்தக் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் தவருது கலந்து கொள்ளும்படி சகல எம்.பிக்களையும் ஜனதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் தென்பகுதியில் வன்முறைச்சம்பவங்கள் குறிப்பாக அரசாங்கச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துதல், அரசாங்க எம் பிக்கள், அரசாங்க ஆதரவாளர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்கு எதிரான கொலை முயற்சி சம்பவங்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதை அடுத்தே இந்த முக்கிய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் தென்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் தீவிரமாக ஆராயப்படவிருக்கிறது (இ-ஐ)

## பஸ்ஸில் பயணம் செய்த 5 தமிழர்கள் எங்கே?

வவுனியா. அக். 16

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இருந்து அனுராதபுரம் நோக்கி இ. போ. ச. பஸ்ஸில் சென்ற ஐவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இதே பஸ்ஸில் பிரயாணம் செய்த மலையகத்தைச் சேர்ந்த ஒருவர் தப்பிச் சென்றதன்மூலம் இத்தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

இதுபற்றித் தெரியவந்துள்ளதாவது:—

வவுனியாவைச் சேர்ந்த தவசிகுளத்தில் உள்ள உறவினர் ஒருவர் வீட்டுக்கு வந்திருந்த மலையகம் புசல்லாவ பகுதியைச் சேர்ந்த இவரும் புசல்லாவ நியூபீக்கொக் தோட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான பெரியசாமி பொன்னுசாமி என்பவரும் சம்பவதினம் இ. போ. ச. பஸ்ஸில் பயணம் செய்தனர்.

அப்போது ஈரப்பெரிய குளத்துக்கும் மதவாச்சிக்கும் இடையில் ஒரிடத்தில் பஸ்ஸை மறித்த சிலர் பொன்னுசாமி உட்பட ஐந்து தமிழ்ப் பயணிகளை இறக்கி காட்டுக்குள் அழைத்துச் சென்ருர்கள்.

இவர் தான் ஒரு முஸ்லிம் என்று கூறியதனல் உயிர்தப்ப முடிந்ததாகத் தெரிவித்துள்ளார்.

காணமற்போன பொன்னுசாமியை அவரது உறவினர்கள் தேடிவருகின்ருர்கள். அவருடன்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மாகாணசபை வேட்பாளர் ஒருவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, அக் 16

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவர் இனந்தெரியாத நபர்களினுல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

களுவாஞ்சிக்குடி பொலீஸ் பகுதியில் களுதாவளை என்னுமிடத்தில் கடந்த புதன்கிழமை இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக்கொலை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கொழும்பில் உள்நாட்டு அமைச்சர் கே. டபிள்யூ தேவநாயகம் சொன்ஞர்.

கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை வேட்பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது இதுவே முதல்தடவை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## முச்சந்தி முரளி



மரணமாவோர் பட்டியலுடன் காணமற் போவோர் பட்டியலும் ஏட்டிக்குப் போட்டியாக நிற்குது பாருங்கோ!

## 2 பஸ்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், அக் 16

வடபிராந்தியப் போக்குவரத்துச்சபைக்கு நேற்று இரண்டு புதிய பஸ்கள் வந்து சேர்ந்தன.

ஏனைய பஸ்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாகவும் அறியவந்துள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு 13 புதிய பஸ்களை வழங்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்முதல்கட்டமாக இரண்டு புதிய பஸ்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

(முன் வந்தசெய்தி 4 ஆம் பக்கத்தில்) (இ-10)

ஜனதிபதி தேர்தலைக் கண்காணிக்க

# சகல அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசித்த பின்பே குழு நியமிக்குக

## சிறிமாவோ கோரிக்கை

கொழும்பு, அக் 16

சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசனை செய்தேஅரசு, ஜனதிபதி தேர்தலைக் கண்காணிக்கக்குழுவைநியமிக்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிருர்.

மஸ்கெலியாவில் நடந்த கூட்டம் ஒன்றில் திருமதி பண்டாரநாயக்கா பேசினுர்.

அவர் மேலும் சொன்னதாவது:

எதிர்க் கட்சிகளைக் கலந்தாலோசிக்காது நியமிக்கப்படும் தேர்தல் கண்காணிப்புக் குழுவை நாம் ஏற்க மாட்டோம்.

சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதலில் விடுத்தது நானே.

அப்போது ஜனதிபதி ஜெயவர்த்தன, எனது தலையைச் சோதிக்க வேண்டும் என்று சொன்ஞர்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தலைக் கண்காணிக்க இந்தியக் குழு வரும் என்ற ஒரு நிபந்தனை உண்டு.

யாருடைய தலையைச் சோதிக்க வேண்டும் என்பது குறித்து நான் ஆச்சரியப்படுகின்றேன்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்ஞர் (இ-எ)

## அரியாலையில்

யாழ்ப்பாணம், அக்.16

அரியாலைப் பகுதியில் நேற்று மாலை ஒருவர் வர் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-10)

# நாளை துக்க தினம்

## அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம். அக் 16

கடந்த வியாழக்கிழமை கொக்குவில் பகுதியில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் சயனைட் அருந்தி மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி கப்டன் கரிகாலனின் (கௌரிபாலன்) மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் விதத்தில் குடாநாடு முழுவதும் நாளை திங்கட்கிழமை முழுவதும் பூரண துக்கதினம் அனுஷ்டிக்குமாறு யாழ்ப்பாணம் மாணவர் ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்திருககிறது.

வர்த்தக நிறுவனங்களையும் கல்வி நிறுவனங்களையும் மூடியும் போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தியும் துக்கம் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

துக்க தினத்திற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு அவ்வப் பகுதி பிரதேசப் பொறுப்பாளர்களிடமும் கோரிக்கை விடுத்திருக்கிறது. (உ)

## சுபநேரம்

16 – 10 – 1988
புரட்டாதி – 30
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:-
09-02முதல் 10-32வரை
ராகுகாலம்:-
04-32முதல் 06-02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஷஷ்டி விரதம்

# கொழும்பு—யாழ் ரயில் சேவை நேற்று இல்லை

யாழ்ப்பாணம், அக் 16

தென்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கிளர்ச்சி நடவடிக்கைகள் காரணமாக வார இறுதியில் வழக்கமாக நடைபெறும் கொழும்பு—யாழ் ரயில் சேவை நேற்று நடைபெறவில்லை.

இன்றும் இச் சேவை நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் ரயில் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு—யாழ் ரயில் சேவை கொழும்பில் இரவில் ஆரம்பிக்கப் படுவதன் காரணமாகவும்— பாதுகாப்பு நடைமுறைகள் சாத்தியமானவையாக இல்லாததன்

(8 ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பிரசாரம் ஆரம்பம்

மாகாணசபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள்கிழக்குப் பகுதியில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதன் முதல் கட்டமாக கட்சிகளின் நிலைப்பாடுகள், கொள்கைகள் குறித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (இ-10)

தமிழ் நாட்டிலிருந்து

# நேற்று 504 அகதிகள் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், அக் 16

தமிழ் நாட்டில் இருந்து நேற்று மற்றும் ஒரு கப்பலில் 504 அகதிகள் காங்கேசன் துறை வந்து சேர்ந்தனர்.

இடைநடுவில் இவர்கள் வந்த கப்பலில் கோளாறு ஏற்பட்டது என்றும் காங்கேசன் துறை முகத்தில் இருந்து அனுப்பப்பட்ட இந்திய கடற்படைக் கப்பலின் உதவியுடன் அகதிகளின் கப்பல் பாதுகாப்பாக கொண்டு வந்து சேர்க்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை காங்கேசன் துறையில் இருந்துயாழ்ப்பாணத்துக்கு ஏற்றிவர ஏழு பஸ்கள் காங்கேசன் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இவர்கள் வருகைக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். அரச அதிபர் மேற்கொண்டிருந்தார். (இ-10)

## நியமனப் பத்திரங்கள் தாக்கல்

இஸ்லாமாபாத், அக். 16

பாகிஸ்தான் நாடாளுமன்றம், சட்டசபைகளுக்கான பொதுத்தேர்தலுக்கு நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வது நேற்றுடன் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

தேர்தல் அடுத்த மாதம் 16ஆம் திகதி நடைபெறும். (இ-எ)

கொல்லப்பட்ட

## பொலீஸ்காரரின் தலை 200 யார் தூரத்திலிருந்து மீட்பு

கொழும்பு, அக் 16

தென்பகுதியில் நேற்று இரு பொலீஸ்காரர்கள் கொல்லப்பட்டனர் ஒரு பொலீஸ்காரரின் தலை 200 யார் தூரத்தில் கிடந்து மீட்கப்பட்டது.

ஹிக்கடுவவிலும் அம்பாந்தோட்டையிலுமே இச்சம்பவங்கள் இடம்பெற்றன.

ஹிக்கடுவையில் கொல்லப்பட்ட பொலீஸ்காரரின் தலையே 200 யார் தூரத்துக்கு அப்பால் கிடந்து மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் மொனருகலை மாவட்டததில் யு. என். பி. ஆதரவாளர்கள் நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இன்னெரு சம்பவத்தில் ஐக்கிய சோஷலிச அணியைச் சேர்ந்த 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். (இ-எ)

## இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், அக் 16

திருநெல்வேலியில் நேற்று இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானுர்.

நேற்றுக்காலை இச் சம்பவம் நடைபெற்றது:

மரணமானவர் நல்லூரைச்சேர்ந்த சந்தையாவின் மகன்என்றும் அறிய வந்துள்ளது (இ-10)

## சுடப்பட்டார்

திருகோணமலை அக் 16

கட்டைபறிச்சானில் இளைஞர் ஒருவர் படையினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

த. வில்வராசா (20 வயது) என்ற இந்த இளைஞர் காலைக் கடனைக் கழிப்பதற்காக காட்டுப் பகுதிக்குச் சென்றபோது சுடப்பட்டார். (இ-150)

## மணிலாவில் 51 பேர் பலி!

மணிலா, அக் 16

மணிலாவில் படகுப் பாதை ஒன்று விபத்துக் குள்ளானதில் 51 பயணிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை அதிகாலை சபாதீவுக்கு அருகில் இவ்விபத்து ஏற்பட்டது.

மேலதிகமாக பயணிகளை ஏற்றிச்சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது விபத்து இடம் பெற்றபோது 120பயணிகள் படகில் இருந்தனர். (இ-எ)

இலங்கை வங்கியின்

## சமூகக் கடன் வழங்குநர் திட்டம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் அக் 16

இலங்கை வங்கியின் "சமூகக் கடன் வழங்குநர் திட்டம்" நேற்று ஊர்காவற் துறையில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

ஊர்வகாவற்துறை சிவன் கோவில் வீதியில் அமைந்திருக்கும் ஆலய பிரதம குரு திரு. ஜெயராமன் ஐயர் சந்திரகாந்தன் அவர்களின் இல்லத்தில் வைபவரீதியாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நேற்றுக்காலை 10.15 மணி அளவில் மங்கள விளக்கேற்றும் வைபவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. விழாவிற்கு இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. க கணேசமூர்த்தி தலைமை வகித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு தகுதியுடைய ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா அடிப்படையில் நேற்று ஐந்து பேருக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டது.

இத் திட்டம் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

விழாவில் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் திரு. மு. கனகரத்தினம், மாவட்ட முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி, யாழ்ப்பாண பிரதான இலங்கை வங்கி முகாமையாளர் திரு. க. திருநாவுக்கரசு, ஊர்காவற்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. பி. ஏ. அருமைநாயகம் ஆகியோரும் பங்குத் தந்தை அருட் திரு. கிருபானந்தன், வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், திரு. பி. கதிரவேலு ஆகியோரும் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டனர். (இ-10)

## குச்ச வெளியில்

குச்சவெளிப் பகுதியில் இடம் பெற்ற கண்ணிவெடியை அடுத்து அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டு 100 க்கும் அதிகமான ஆண்கள் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப் பட்டனர்.

தாக்கப்பட்டவர்களில் 9 பேர் திருமலை மருத்துவ மனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தங்களை அவர்களின் வாகனத்தில் ஏற்றி வந்து மருத்துவமனையில் அனுமதித்ததாக அவர்கள் கூறினர். (இ-150)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தலாவுக்கு பாவிக்கக் கூடிய நல்ல பனைமரங்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: பரிபாலன சபை ஸ்ரீசட்டநாதர் ஆலயம் பருத்தித்துறை வீதி நல்லூர். (7046)

சுண்டுக்குளி பரியோவான் கல்லூரி (St. Johns College) அருகாமையில் உள்ள வீடும், மூன்றுபரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு ராஜதுரை இல. 45, மூன்றும் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (7301)

மோட்டார் சைக்கிள் HONDA M B 100 உடன் விற்பனைக்குண்டு. காலை 9மணி முதல் பார்வையிடலாம். தொடர்பு: நியூ சிறீ கண்ணன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி. (7025)

எரு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: P. சேனாதிராஜா, அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி. (7041)

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகாமையில 2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; திரு. A.வேல்முருகு நிலஅளவையாளர், தும்பளை பருத்தித்துறை. (7040)

PL 4 லேத் மெசின் விற்பனைக்கு உண்டு. பிள்ளையார் மெறறல் வேர்க்ஸ், 259, காங்கேசன்துறைவீதி. யாழ்ப்பாணம் (7215)

நல்ல நிலையிலுள்ள ரொலெக்ஸ் ஸ்போட் சைக்கிள் ஒன்றும் ஹொண்டா ஷாலி (புதிய மொடல்) மோட்டார் சைக்கிள் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. எஸ் மகேந்திரன், ஜெனரல் மோட்டோர்ஸ், பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். (7214)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள், Ceiling Fan, Room Heater, மகாராஜா ஹொல் செற் T V. Stand, கண்ணாடி மேசை, Ken-Wood Electric Cooker Oven, சாப்பாட்டு மேசை, கதிரை, Office மேசை, தையல்மெஷின், கட்டில், மெத்தை, Record Player, கிளாஸ் வகை மற்றும் பலபொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு: பழைய நம் 14/1, அம்மன் வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம் [illegible]

Honda - [illegible], Old Model ஆகிய மோட்டார்சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40, மணிக்கூட்டு வீதி [ஞானம்ஸ் ஸ்ருடியோ முன்பாக யாழ்ப்பாணம் [7038]

### காணி விற்பனைக்கு 2 1/2 பரப்பு

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியில் உள்ள ராஜன் வெல்டிங் அருகாமையில் உள்ள ஒழுங்கையில் வீடு கட்டக்கூடிய 2½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. இது சார்பாக இ. தி. (E T) செல்லையா தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (C/ 605)

### இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், குப் குஞ்சுகள், விருந்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

### தீபாவளி வாழ்த்து மடல்கள்

பலவகை டிசைன்களிலுள்ள எல்லாவகை தீபாவளிவாழ்த்து மடல்கள்விற்பனையாகின்றன. வியாபாரிகள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். இம்முறை அனைத்தும் புதிய டிசையின்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை பஸ்நிலையம், மற்றும் எமது களஞ்சியம் மின்சார நிலைய வீதியிலும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (7205)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர் C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6881)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

## தேவை

சிங்கப்பூரில் தமிழ், சீன, இந்திய குடும்பங்களுக்கு பணிப்பெண்கள் தேவை. நாற்பது வயதுக்கு உட்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம் கத்தோலிக்க ஆங்கில அறிவுள்ளோருக்கு முன்னுரிமை ஆகக் கூடிய மாதாந்த சம்பளம் ரூபா 3500. பிரயாண ஒழுங்குகளையும் பொறுப்பேற்று அனுப்பிவைக்கப்படுவர். துரைசிங்கம், 37oB, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்னால்) (72[illegible])

### உடன் தேவை

சிலிண்டர் மெசின் மைண்டர். பக்கம் கட்டுபவர்(PageMaker), அச்சுக் கோப்பாளர், உதவி ஆசிரியர்கள் எல்லா ஊர்களிலும் நிருபர்கள் தேவை. நேரில் வரவும். 'நம்நாடு' 192 K K S வீதி, கன்னாகம் (7202)

### தவறிவிட்டது

நமசிவாயம பத்மாவதி ஆகிய எனது அடையாள அட்டை இல. 588273466V 11/10/88ல் கல்வியங்காட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7042)

மேரி அக்னஸ் கிளேயா அன்டறூ ஆகிய எனது 615852880V அடையாள அட்டையையும் மணிப் பையையும் 13/10/88 அன்று யாழ். நவீன சந்தையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அதனை உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7045)

## கல்வி

"சனல்" கலை இலக்கிய வட்டம். இது பல கலைப் படைப்புக்களை தயாரிக்க இருப்பதனால் கதை, கவிதை போன்ற இலக்கியம் படைப்பவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் சனல் வட்டம் 12, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (7212)

### G. C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

### G. C. E. A/L - 1989

பௌதிகவியல் வகுப்புக்கள் ஆசிரியர் S. நிர்மலா B. Sc, இல 9. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் வகுப்புக்கள்:- திங்கள், புதன் வியாழன் 4 . 45 - 5. 45 p'm, புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 15-10-88 சனி, ஞாயிறு.4 00-5.30 p m, 8 00 - 9.00 a m 1989 ற்குரிய மீட்டல் வகுப்புகளும் ஆரம்பிக்கப்படும். (7084)

### தொழில் கல்வி

வெளிநாடுகளில் பிரபலயமான தொழில் கல்வி ஆரம்பம் 20 – 10 – 88 "Radio Amatures" (Morce Operators) (Ship) (P. M. G ★ Telex & I. D. D Operators(Interntaional இருபாலரும் குறிப்பிட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும் Electronics Engineer Keen Centre, Thirunelvely, (6890)

### German Language பிரிவு II

வெளிநாட்டில் உயர் கல்வியை தொடர்பவர்களுக்காக புதிய பிரிவு II 18 – 10 – 88 ஆரம்பம இத்துடன் சம்பந்தப்பட்ட மொழி பெயர்ப்புக்களுக்கும் தொடர்பு Mr Sabanayagam, German Language Teacher "Rudi Cot" 33, Kandy Road, Jaffna. (7047)

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் Fudo Enterprises 39/17 மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஷப்ரூ, சாமி அன்கோவிற்கு அருகாமையில்) (7100)

### ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை

பிரபல பாடசாலைகளில் ஆண்டு 6 அனுமதிப் பரீட்சையில் சித்தி பெறுவதற்குரிய மாதிரிப் பயிற்சி 8 வினாத்தாள்களைக் கொண்டது யாழ்ப்பாணத்திலுள்ள சகல புத்தகசாலைகளிலும், புதிய கல்வி நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபா 14. 50 (7209)

### வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட "பிரதீப் மூவ்ஸ்", புது வீதி கொய்யாத்தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' (கணில்). (6900)

### திருமண சேவை

பிள்ளைகளை தகுந்த வயதில் திருமணம் செய்து மகிழ முடியாதிருக்கும் பெற்றோர் உடன் நாட வேண்டியது. புதிய "மாங்கல்யா" மஸ்ரீரி சேவிஸ். 14, விநாயகர் ஒழுங்கை, கொழும்புத்துறை மேற்கு, திருவிளங்கம். (7211)

## கடன் விற்பனைத் திட்டம்

சுழிபுரம், அக் 16

சங்கானைப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர்சபைத்தலைவர் திரு கே.கந்தையா, அங்கத்தவர்களுக்குக் கடன் விற்பனைத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யும் நோக்குடன் ஆலோசனைகள் அடங்கிய ற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார். சகல கிளை அங்கத்துவ நிர்வாகிகளுக்கும் இச்சுற்று பெரும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழ்மொழி

### முன்னோடிப்பரீட்சை

மானிப்பாய், அக் 15

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற இருக்கும் ஜீ. சீ. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி தமிழ்மொழிப் பாடத்தில் ஓர் முன்னோடிப் பரீட்சையை நடத்த யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் முடிவு செய்திருக்கிறது.

இப்பரீட்சை இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-ச-90)

## பிரதம கல்வி அதிகாரி கவனிப்பார்

இம் மாதத்தின் கடைசி வாரம் முதல் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளரின் கடமைகள் அனைத்தையும், பிரதம கல்வி அதிகாரி கு சோமசுந்தரம் அவர்களே கவனிப்பார்.

இம் மாதம் 31 ஆம் திகதி மேற்கு ஜெர்மனியில் நடைபெறவுள்ள கருத்தரங்கு ஒன்றில் பங்கு பற்றுவதற்காக யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர். திரு. வெற்றிவேலுசபாநாயகம் இம் மாதக்கடைசி வாரத்தில் மேற்கு ஜெர்மன் செல்கிறார்.

இந்தக் கருத்தரங்கு இரு வாரங்கள் மட்டுமே நடைபெறும் என்றும் பணிப்பாளர் மீண்டும் நாடு திரும்ப ஒரு மாத காலம் செல்லும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது

அதுவரையில் இவரது கடமைகள் அனைத்தையும் பிரதம கல்வி அதிகாரியே கவனிப்பார். (உ 8)

## சென் ஜேம்ஸ் நூலகத்துக்கு உதவி

குருநகர், அக் 16

சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய நூலகத்திற்கு 32 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பங்குத் தந்தை வணபிதா பி. எம் இம்மானுவேல்வைத்தியக்கலாநிதி ஜே. பி. சி. பிலிப்ஸ், சமாதான நீதிபதி இ சிலுவைதாசன், குத்தகையாளர்சங்கம்,பழைய மாணவர்கள், பெற்றோர் இருபதாயிரம் ரூபா பெறுமதியான நூல்களை வழங்கினர்.

யாழ் லயன்ஸ் கழகம் 8000/- ரூபா பெறுமதியான நூல்களையும் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் 4000 ரூபா பெறுமதியான நூல்களையும் வழங்கியுள்ளன (இ[illegible])

## கிளிநொச்சி சந்தையில் மழைகாலங்களில் நடமாடமுடியாத நிலை

தாளையடி, அக் 16

கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையம், சந்தை ஆகியன மழைக்காலத்தில் பொது மக்கள் நடமாட முடியாத நிலையில் உள்ளன.

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது, பஸ் தரிப்பு நிலையம், சந்தைக் கட்டடங்கள், கடைகள் என்பன முற்றாகச் சேதமாக்கப் பட்டன.

தற்போது பஸ் தரிப்பு நிலையமும், சந்தையும் பழைய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ள போதிலும், மழைக் காலத்தில், பொது மக்கள் நடமாட முடியாத நிலையில் உள்ளன.


## ஓர் அரிய சந்தர்ப்பம்

### கனடா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா

போன்ற நாடுகளுக்கு விசா வசதிகளுடன் பிரயாணங்கள் இப்பொழுது எம்மால் ஒழுங்குசெய்யப்பட்டு வருகின்றன.

ஜேர்மனி நாட்டிற்கு எமது ஸ்தாபனப் பிரதிநிதிகள் பிரயாணிகளை நேரடியாகக் கூட்டிச் செல்வார்கள்.

மேலும்

சவூதி அரேபியாவிலும் பகறெயினிலும் பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்களை Open Visa விசாக்களில் அனுப்புவதற்கும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வேலைகள் விபரம்

**சவூதி அரேபியா**

| | | |
|---|---|---|
| 1. | Drivers | Sal. 600 S.R |
| 2. | Labourers | Sal. 400 S.R |

**பகறெயின்**

| | | Nos | Salary |
|---|---|---|---|
| 1. | Welders | 15 — 100 | B D |
| 2. | Mechanical, Engineers | 03 — 175 | B.D |
| 3. | Pharmacists | 10 — 150 | B.D |
| 4. | Masons | 05 — 60 | B.D |
| 5. | Carpenters | 05 — 60 | B.D |

Food and Accommodation provided free.

முழு விபரங்கட்கு:

**C. U. RAJENDRAM**

Trans World Associates Ltd.

Travel & Employment Division — (Kokuvil)

என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (பழைய கொக்குவில் தபாற் கந்தோருக்கு முன்பாக)

எமக்கு சப் ஏஜண்டுகள் இல்லை

(7049)


சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்.

## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

பின்வரும் பொருட்கள் மேற்படி சங்கத்தின் முன்றலில் வைத்து 22 - 10 - 88 சனிக்கிழமை முற்பகல் 10 . 00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

(1) கழிக்கப்பட்ட லொறி ரயர்கள், ரியூப்புக்கள், மவ்ளர்கள்

(2) பாவிக்கக் கூடிய 12 வோல்ரேச் உயசா பற்றறி.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். 14 - 10 - 88

(C-607)


எமது நேற்றைய

## புதிய வெளியீடுகள்

(1) சிவாஜி, வடிவுக்கரசி

"என்தமிழ் என் மக்கள்"

(2) MERCENARY FIGHTERS

- WAR FILM -

இவ் வார வெளியீடுகள்:

1. ஜெயிக்கும் கரங்கள்
2. சிரிப்பு வெடி
3. விவசாயி
4. தாய்க்குத் தலைமகன்
5. உரிமைக்குரல்
6. அரசிளங்குமரி
7. புதுமைப்பித்தன்

அனைத்தும் ஒறிஜினல் பிரதிகள்

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(C/ 609)



## Issue of Day Old Chicks

## கோழிக் குஞ்சு விநியோகம்

கீழ்க்காணும் கோழிக்குஞ்சுகளின் விலை நறைக்கப்பட்டுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| Prima Lohmann | வெள்ளைப் பேடு | 14/- | முதல் |
| Prima Lohmann | சிகப்புப் பேடு | 11/- | முதல் |
| Prima Lohmann | இறைச்சிக் கோழிக்குஞ்சு | 15 50 | முதல் |
| Prima Lohmann | சிகப்புச் சேவல் | 3/50 | முதல் |
| Golden Comet | சிகப்புப் பேடு | 12/- | முதல் |
| Hyline | கறுப்புப் பேடு | 13/- | முதல் |
| Hyline Silver | சிகப்பு - பொன்னை பேடு | 10/50 | முதல் |
| Hyline | வெள்ளைப் பேடு | 12/50 | முதல் |

நாங்கள் தரமான கோழிக்குஞ்சுகள் மட்டுமே விநியோகம் செய்கின்றோம்

(1) புதன்கிழமைகளில் குஞ்சுகள் விநியோகிக்கப்படும்.
(2) குஞ்சுகளைப் பதிவு செய்து ஒரு வாரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(3) எம்மிடம் குஞ்சுகள் வாங்குபவர்களுக்கு Paniketdral Vaccine இலவசமாகக் கொடுக்கப்படும்.
(4) எங்களிடம் குஞ்சு கொள்வனவு செய்வோருக்கு தேவையான ஆலோசனை தருவோம்.
(5) கோழிவளர்ப்புக்குத் தேவையான மருந்து வகைகள் தீன், தண்ணீர்ப் பாத்திரங்கள் விற்கப்படும்.
(6) எல்லா வகையான Original Prima கோழித்தீன் நியாயமான விலைக்கு கிடைக்கும்.

### எங்கள் உப விநியோகஸ்தர்கள்:

1. சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை
2. அரியாலை கால்நடை உணவு விற்பனை நிலையம், கண்டி றோட், அரியாலை.

## பிறிமா கோழிக்குஞ்சு, கோழித் தீன், மாட்டுத் தீன் ஏக விநியோகஸ்தர்கள்:

## NALLUR FARM CENTRE

C/o. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர்.

(7050)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. வண்டவாளங்களை வெளியிடுவேன்

## றெனி மிரட்டுகிறார்

கொழும்பு, அக். 16

ஐக்கிய தேசியக் கட்சி எனக்கு ஆத்திரமூட்டினால் அவர்களின் வண்டவாளங்களை புள்ளி விவரங்களுடன் வெளியிடுவதைத் தவிர வேறு வழி எனக்கு இல்லை.

-இப்படி முன்னாள் நிதி அமைச்சர் றெனி டிமெல் தெரிவித்தார்.

கண்டியில் நடந்த கூட்டத்தில் அவர் பேசினார். அப்போது அவர் சொன்னதாவது;

பழைய வீட்டுக்கு வந்து விட்டேன் அது மகிழ்ச்சி தருகிறது.

சுதந்திரக்கட்சியில் இருந்து 13 ஆண்டுகள் சேவை புரிந்தேன்

யு. என். பி. கட்சியில் இருந்து 13 ஆண்டுகள் சேவையாற்றினேன்.

அந்தந்தக் கட்சியில் இருந்த சமயம் கழுத்தறுப்பு, காட்டிக்கொடுக்கும் வேலைகளில் நான் ஈடுபடவில்லை.

அமைச்சர் பதவி நாடி சுதந்திரக்கட்சிக்கு நான் மீண்டும் வரவில்லை. திருபதி பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ் சேவையாற்றுவதை நான் பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

யு. என். பி என்னை ஆத்திரமடையச் செய்தால் அவர்களின் இரகசியங்களை வெளியிடுவேன். அப்போது அவர்கள் வெட்கித் தலைகுனிவார்கள்.

- இப்படித் திரு. றெனி டிமெல் சொன்னார். (உ-எ)

### ஜே.வி.பி. மிரட்டலின் எதிரொலி

# கட்டாய வாக்களிப்பு சட்டம் அமுலுக்கு வருமா?

## அரசு தீவிரமாக ஆராய்கிறது

கொழும்பு, அக். 16

வாக்களிப்பதைக் கட்டாயப்படுத்தும் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவது பற்றிய சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

உத்தேச சட்ட மூலம் சகல வாக்காளரையும் வாக்களிக்கக் கட்டாயப் படுத்துமாம்

மாகாணசபைத் தேர்தலில் செய்தது போன்று ஜனாதிபதி தேர்தலிலும் வாக்காளர் வாக்களிப்பதைத் தடை செய்வதில் ஜே. வி. பி. யினர் ஈடுபடலாமெனக் சந்தேகிக்கப்படுகிறது அம் முயற்சியை முறியடிக்கும் நோக்கத்திலேயே புதிய சட்ட மூலத்தைக்கொண்டுவர அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

ஆஸ்திரேலியாவில் கட்டாய வாக்களிப்பு முறை நடைமுறையில் இருக்கிறது. அங்கு வாக்களிக்கத் தவறுபவர் 25 ஆஸ்திரேலியடாலர் அபராதம் செலுத்த வேண்டும்.

வாக்காளர் ஒருவர் தான் விரும்பிய வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க வகை செய்யக் கூடியதாக தேர்தல் சட்டத்தைத் திருத்துவது பற்றியும் அரசு ஆலோசித்து வருவதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)


Jaffna College
Institute of Technology
Vaddukoddai

பட்டமளிப்பு விழா-1988

காலம்: 21-10-88 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி
இடம்: கல்லூரி ஆபெல்ஸ் மண்டபம்

பிரதம விருந்தினர்:
திரு. A. P. றஞ்சிதபாலன்
அவர்களும்
(Deputy General Manager Lanka Cement Ltd K. K. S)
திருமதி மீனா றஞ்சிதபாலன்
அவர்களும்

1988ஆம் வருடத்தில் தொழில் நுட்ப டிப்ளோமா, தொழில் நுட்ப சாதாரம், தொழில் பயிற்சி தராதரப் பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்கள் மற்றும் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(C-599)



கம்பியூட்டர் விரிவுரைகள்

BASIC
with
AMPLE PRACTICALS
2 MONTHS
(INTENSIVE COURSE)

ஆரம்பம்: 24-10 1988
சான்றிதழ் உண்டு
பாதுகாப்பான இடம்

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Leaders in Computer Education)
16, 3-ஆம் குறுக்கு வீதி,
(O L R தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.
(C/588)


## 'சைவவிரதங்களும் விழாக்களும்''

யாழ்ப்பாணம் அக் 16

வண்ணை நாவலர்மகா வித்தியாலயத்தில் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு ''சைவவிரதங்களும் விழாக்களும்'' என்ற நூல வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

கோப்பாய் - சிவம்எழுதிய இந்நூலைப் பேராசிரியர்-அ சண்முகதாஸ் கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகத்தின் தலைமையில் வெளியிட்டு வைப்பார்.

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

சோமாஸ்கந்த சர்மா வரவேற்புரையும், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ. பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையும், மில்க்வைற் அதிபர் வாழ்த்துரையும் கூறுவார்கள்.

பரமசாமிக் குருக்கள் முதற்பிரதியையும், சுந்தரேசக் குருக்கள் இணைப் பிரதியையும் பெறுகிறார்கள். (இ)

## பிஸ்கெட் விநியோகம்

மானிப்பாய், அக்.16

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இந்த தவணையும் இலவசமாக விநியோகிப்பதற்கான கெயர் பிஸ்கட்டுக்களை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு வழங்கிவருகிறது.

முதலாம் ஆண்டுமுதல் ஐந்தாம் ஆண்டுவரையான பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கவென இந்த பிஸ்கட்டுக்களை கெயர் ஸ்தாபனம் அன்பளிப்புச்செய்திருக்கிறது. (உ-90)

## இவ்வாரமும் இயங்கவில்லை

ஒட்டுசுட்டான் அக். 16

முல்லைத்தீவு அரசாங்க செயலகம் இவ்வாரமும் செயற்படவில்லை. (இ-113)

# புளத்சிங்களத் தொகுதி விவகாரம் இழுபறியில்

கொழும்பு, அக் 16

புளத்சிங்களத் தொகுதி எந்தக் கட்சிக்கு உரியது என்பது பற்றி இறுதியாகத் தீர்மானிக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அளிப்பது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் காரியக் கமிட்டி முடிவு செய்தது.

இதனிடையில் தேர்தல் ஆணையாளரின் உத்தரவுப்படி, சுதந்திரக் கட்சி, புளத்சிங்களத் தொகுதி எம்பியாக திரு. றெனி டிமெலை நியமனம் செய்ததை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதை அரசு நிறுத்தியுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் தீர்மானம் பிழையானது என்ற காரணத்தினால் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் வின்சென்ட் பெரேரா தெரிவித்தார். (இ - எ)

# தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய நடவடிக்கை

மானிப்பாய், அக் 16

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் தளபாடங்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் முயற்சி எடுத்து வருகிறது.

சென்ற ஆண்டு நடைபெற்ற அம்பாவிதங்களை அடுத்து குடாநாட்டில் சகல பாடசாலைகளிலும் தளபாடப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது.

புதிய தளபாடங்களைச் செய்வதற்கென கல்விச் சேவைகள் அமைச்சு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு ஐம்பது லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது

இதனைக் கொண்டு புதிய தளபாடங்கள் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு பின்னர் ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டு விட்டதாகவும்-

அநேகமாக இவ்வருடம் முடிவதற்குள் அவை பாடசாலைகளுக்கு கிடைத்துவிடும் என்றும் கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (இ-90)

## சடலம் யாருடையது?

காவலுக்கால் கூடலைக்குள் இருந்து மீட்கப்பட்ட சடலம் யாருடையது?

அடையாளம் காணப்படாத நிலையில் கடந்த ஒருவாரத்துக்கு மேலாக இச்சடலம் யாழ் ஆஸ்பத்திரியில வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் சூட்டுக்காயத்துடனும், வெட்டுக்காயத்துடனும் காரைக்கால் சுடலைக்குள் புதையுண்ட நிலையில் இருந்து மீட்கப்பட்டது

இச்சடலத்தை உரியவர்கள் வந்து அடையாளம் காட்டி எடுத்துச் செல்லுமாறு யாழ் பொலீஸ் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-10)

## தற்கொலை

ஒட்டுசுட்டான், அக் 16

சற்சிலைமடுக் கிராமத்தில இளைஞர் ஒருவர் அண்மையில் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

காதல் தோல்வியே தற்கொலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-113)


I. E. T. TECHNICAL INSTITUTE
11B, Stanley Road, Jaffna-
(லிடோ தியேட்டருக்கும் முட்டாசுக்கடை சந்திக்கும் இடையில்)
● எலக்ரிஷன் (வயரிங்) ● ஓட்டோஎலக்ரிஷன்
● வைண்டிங் ● மெக்கானிக்
பயிற்சிகள் ஆரம்பம்: 19- 10- 1988
(7200)


# வவுனியா நகரில் பாதுகாப்புத் தீவிரம்

வவுனியா, அக் 16

வவுனியா நகரைச் சுற்றி அமைந்துள்ள தடைமுகாம்களுக்கு உட்பட்ட பகுதிகளின் சந்திகளிலும் கேந்திரமான இடங்களிலும் குழுக்களாக இந்திய அமைதிப் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

வடக்கு — கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கென மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தொடர்ந்து மேற்படி இடங்களில் கிடங்குகள் அமைத்தும் மணல்மூடைகள் அடுக்கியும் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். (அ-164)

# பின்தங்கிய பகுதி வைத்தியசாலைகளுக்கு வானொலித் தொடர்பு

யாழ்ப்பாணம், அக் 16

வடபகுதியின் பின்தங்கிய பகுதி வைத்தியசாலைகளுக்கு வானொலி தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளது.

இதன்படி நெடுந்தீவு, அனலைதீவு, மருதங்கேணி, பூநகரி, இரணைதீவு அக்கராயன்குளம், ஆகிய பகுதி வைத்தியசாலைகளுக்கு இந்த வானொலி தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளது.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் சுகாதாரப்பணிப்பாளர் எல். கனகசபை தெரிவித்தார்.

இதன்படி மேற்குறிப்பிட்ட ஆறு பின்தங்கிய வைத்தியசாலைகளும் யாழ்ப்பாணம், பளை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய நான்கு ஆஸ்பத்திரிகளில்மிகச் சமீபமாக உள்ள ஏதாவது ஒன்றுடன் தொடர்புகொண்டு அம்புலன்ஸ் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாகவே இந்த வானொலித் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

இந்த தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டதும் அவசர நோயாளிகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்வதில் எதிர்நோக்கப்படும் தாமதம் தவிர்த்துக் கொள்ளப்படும் என்று பணிப்பாளர்தெரிவித்தார்.

இதற்கென சாவகச்சேரி, பளைப் பகுதி வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட உள்ளதாகவும் கிளிநொச்சிக்கு புதிய அம்புலன்ஸ் வழங்கப்பட்டு விட்டதாகவும் பணிப்பாளர் மேலும் கூறினார். (அ-9)

# பைபிள் படிக்கச் சென்ற இளைஞர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், அக் 16

'பைபிள்' படிக்கச் சென்றவர் கச்சேரி-நல்லூர் வீதியில் சடலமாக மீட்டெடுக்கப்பட்டார்.

நேற்று முன் தினம் கச்சேரி-நல்லூர் வீதியில் இளைஞரின சடலம் ஒன்று சூட்டுக் காயத்துடன் கிடக்கக் காணப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர் தெய்வநாயகம் கௌரீஸ்வரன் (வயது 20) என அடையாளம் காணப்பட்டது.

அவரது மரணம் தொடர்பான விசாரணை நேற்று யாழ் பொலீஸ் பிரிவில நடைபெற்றது.

மரணவிசாரணையின் போது தயார் சாட்சியம் அளிக்கையில் புதன் கிழமை மாலை 3-30 மணி அளவில பைபிள படிப்பதற்காக எனது மகன் சைக்கிள் எடுத்துக் கொண்டு வெளியே சென்றார்

பின்னர் பிற்பகல் 4 30 மணி அளவில் அவர் சுடப்பட்டு வீதியில் கிடப்பதாக தகவல் கிடைத்தது என்றார். (இ-10)

## நவக்கிரக மண்டபம்

வட்டுக்கோட்டை, அக் 1

சங்கரத்தை பிட்டிபதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நவக்கிரகமண்டபம் நிர்பணிக்கப்பட்டு வருகிறது.

50 ஆயிரம்ரூபா செலவில் ஸ்தாபிக்கப்படும் இந்த நவக்கிரக மண்டபத்தின் அமைப்பு வேலையில் அராலியைச் சேர்ந்த சிற்பகலா சிரோமணி தம்பிராசா குழுவினர் செய்துவருகின்றனர். மிகவிரைவில் நவகிரக பிரதிஷ்டை செய்யப்படுமென ஆலய குருவானர் ர தாக் குருக்கள் தெரிவித்தார், (உ)

### மலேரியாத் தடுப்பு வேலையில் ஈடுபடும்

# சமயாசமய ஊழியரை நிரந்தரமாக்குங்கள்

## பிரதமரிடம் கோரிக்கை

மலேரியாத்தடுப்புஇயக்கத் திணைக்களத்தில் நீண்டகாலம் சமயாசமய ஊழியர்களாகப் பணிபுரிந்துவரும் வடபகுதியைச் சேர்ந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது

முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 ஊழியர்களும், வவுனியா மாவட்டத்தில் 40 ஊழியர்களும், மன்னார் மாவட்டத்தில் 33 ஊழியர்களும் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை

சமயாசமய ஊழியர்களை நிரந்தரமாக்கும் பிரதமர் பிரேமதாசவின் திட்டத்தின் கீழ் இவர்களையும் நிரந்தரமாக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது

வடபிராந்திய விவசாய தொழிலாளர் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை இதுசம்பந்தமாகப் பிரதமருக்கும் முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட அமைச்சருக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கிறார். (உ-94)

# வீமன்காமம்குடியேற்ற பகுதியில் 81 வீடுகள்

காங்கேசன்துறை அக் 16

வீமன்காமம் குடியேற்றப்பகுதியில் 81 வீடுகளை அமைத்து வழங்க நோர்வே செஞ்சிலுவைச்சங்கம் ஒப்புதல் அளித்துள்ளது

வலி-வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் யாழ் செஞ்சிலுவைச்சங்கம் ஊடாக நோர்வே செஞ்சிலுவை சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியதன் பயனாக வீடு அமைத்து வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் இடம் பெயர்ந்து கஷ்டமுறும் விவசாயக் குடும்பங்கள் பயன் பெறவிருக்கின்றன. (இ-18)

## தொழில்நுட்ப நிறுவனம்

யாழ்ப்பாணம் அக் 16

வட்டுக்கோட்டை யாழ் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவன தினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது

பிரஸ்தாபக் கல்லூரியில் இந்த வைபவம் இடம் பெறும். இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக திரு.ஏ பி றஞ்சிதபாலன் (பிரதி பொது முகாமையாளர் ,காங்கேசன்துறை) கலந்துகொள்கிறார். (இ-10)


தேவை

அனுபவமுள்ள காசாளர் தேவை. (இருபாலாரும்). மாநகர எல்லைக்குள் வசிப்பவர்மட்டும 22-10-88 க்கு முன் விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

கொழும்பு ஸ்ருடியோ:
55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)
C/600



வலி-கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கம்

அறிவித்தல்


வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம் கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/-உம் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 19-10-88ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
நீர்வேலி,
1983. 10. 13 (C/602)



புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது

சில்லறை விலை ரூபா 68/55
125 கிறாம்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமம் அரசினர் வைத்தியசாலை குறைகளை நீக்குமாறு கோரிக்கை

கொடிகாமம், அக் 16

கொடிகாமம் அரசினர் வைத்திய சாலையின் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமெனத் தென்மராட்சி கிழக்குப் பொதுமக்கள் கோரிக்கை விட்டுள்ளனர்.

இவர்கள் தங்கள் கோரிக்கையில் தெரிவித்ததாவது:—

தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த கொடிகாமம், கச்சாய், மிருசுவில், எழுதுமட்டுவாள், உசன் விடத்தற்பளை, கெற்பலி ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு வைத்திய சேவையாற்றி வரும் வைத்தியசாலை இது ஒன்றே ஆகும்

சுமார் 40 வருடங்களாகப் பிரசவ வைத்திய சேவையும் இங்கே வழங்கப்பட்டு வருகிறது.

முன்னர் இங்கே இரு வைத்தியர்களும் கணிசமான மருத்துவ மாதர்களும் சேவைசெய்தனர்.

தனியே ஒரு வைத்தியர் மட்டும் இப்போது சேவையாற்றி வருகின்றார்.

இப்போது தற்காலிக மருத்துவமாது ஒருவர் பணிபுரிவதாகக் கூறப்படுகிறது.

வைத்தியர் தங்கியிருந்து வைத்தியம் செய்வதற்கான வைத்தியர் விடுதி அத்தியாவசியமாக அமைக்கப்பட வேண்டும்.

மேலும் தண்ணீர் வசதியும் கிடைக்க வசதி வேண்டும். இங்குள்ள கிணற்று நீர் வற்றிப் போகும் வேளையில் குழாய்மூலம் தண்ணீரை வெளியே எடுக்க முடியாது கஷ்டம் ஏற்படுகிறது. இப்படித் தெரிவிக்கப்படுகிறது. (இ-75)

---

# ஜெயவர்த்தனவுக்கு எதிராக மக்களின் அபிப்பிராயம்

## 'நியூஸ்வீக்' கணிப்பீடு

நியூயோர்க், அக் 16

ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் போட்டியிடப் போவது இல்லை என்று திரு ஜெயவர்த்தனா அறிவிப்பதற்கு முன்னரே மக்கள் அபிப்பிராயம் அவருக்கு எதிராக திரும்ப ஆரம்பித்து விட்டது.

—இப்படி அமெரிக்க சஞ்சிகை 'நியூஸ்வீக்' அக்டோபர் 3 ஆம் திகதி இதழில் கருத்து வெளியிட்டிருக்கிறது.

'A National Sigh of Relief' என்ற தலைப்பில் 'நியூஸ்வீக்' இல் பிரசுரமான கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு;

சிலருக்கு திரு ஜெயவர்த்தனா நாட்டின் வீரனாக இருக்கிறார். ஆனால் திரு. ஜெயவர்த்தனா குறித்து நாடு அவ்வளவு அனுதாபம் கொண்டிருக்கவில்லை.

மூன்றாவது முறை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடப் போவதில்லை என்று திரு. ஜெயவர்த்தனா 82 ஆவது வயதை எட்டும் தருணத்தில் அறிவித்தார்.

ஆனால் அதற்கு முன்னதாக மக்களின் எதிர்ப்பு அலை அவருக்கு எதிராகத் திரும்பத் தொடங்கி விட்டது.

திரு. ஜெயவர்த்தனா பதவியில் இருந்து விலகுவதற்குரிய காலம் வந்து விட்டது என்று ஒரு வருடத்துக்கு முன்னரே மக்கள் எண்ணத் தொடங்கி விட்டனர்.

தான் போட்டியிடப் போவது இல்லை என்று ஜெயவர்த்தனா அறிவித்தவுடன் நாடே கூட்டாக "அப்பாடா" என்று பெருமூச்சுவிட்டது.

இதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என மேற்குநாட்டு இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

ஜெயவர்த்தனாவின் அறிவிப்பு பதட்டத்தைத் தணிப்பதாக அமைந்ததாகவும் அந்த இராஜதந்திரி மேலும் தெரிவித்தார்.

இது ஏன் என்று அறிவது கஷ்டமான காரியமல்ல.

1983 இல் இருந்து தமிழ்த் தீவிரவாதிகளுடன் மிகுந்த கரிசனையுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு ஜெயவர்த்தனா மறுத்து வந்தார்.

தமிழ்த் தீவிரவாதிகள் நடத்தும் புரட்சியின் உண்மை நிலையைக் கூட அவர் ஏற்றுக்கொள்ள மறுத்து வந்தார்.

காலம் பிந்துவதற்கு முன்னர் திரு. ஜெயவர்த்தனா தமிழர் குறைபாடுகள் குறித்து தீவிரமாக விரைந்து செயற்பட்டிருக்க வேண்டும் என்று மேற்குநாட்டு ராஜதந்திரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

பெரிய சாதனையாக அவர் எதனைக் கருதினாரோ அது அவரைக் கைவிட்டுவிட்டது

நல்ல எண்ணங்களுடன் அவர் செயற்பட்டாலும் தனது குறுகிய நோக்கம் கொண்ட அரசியலுக்கு அவர் பலியாகி விட்டார்.

—இப்படி 'நியூஸ்வீக்' சஞ்சிகையில் திரு வில்லியம் பேர்ஜரும், திரு ரொன் மொரோவும் எழுதியிருக்கின்றனர். (உ-எ)

---

## நாடகக் கலைஞருக்கு அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம் அக்-16

மறைந்த நாடகக்கலைஞன் வி. எம். குகராஜாவின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிறு காலை 9 30 மணிக்கு யாழ்ப்பாணம். 148/1 ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் நடைபெறும்.

நடிகமணி வீ. வீ. வைரமுத்து தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் குழந்தை சண்முகலிங்கம், டொமினிக்ஜீவா எஸ். நடராஜா, சி. மௌனகுரு... ன்ப நாயகம், எஸ். ஜெயக்குமார் ந. சிவலிங்கம், பிரான்சிஸ், ஜெனம் குறமகள் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவர்.

முருகையன் ஏ. ரி. பொன்னுத்துரை, ந. இரவீந்திரன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

சோ. தேவராஜா நன்றியுரை நிகழ்த்துவார். [இ]

---

புதிதாக வழங்கப்பட்ட 13 பஸ்களும்

# இவ்விரண்டு பஸ்களாக வடக்கே எடுத்து வரப்படும்

யாழ்ப்பாணம், அக். 16

வடபிராந்தியப்போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டுள்ள 13 புதிய பஸ்களையும் இவ்விரண்டு பஸ்களாக இங்கு எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத்தகவலை சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வ. பி. போ. சபைக்கென 13 பஸ்கள் வழங்கப்பட்டிருப்பினும், இந்த பஸ்களை இங்கிருந்து சென்ற 13 சாரதிகள் போக்குவரத்து சபை அதிகாரிகளிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதும் தெரிந்ததே.

ஆனால் தற்பொழுது தென் பகுதியில் இடம் பெற்றுவரும் கலவரங்களில் பெரும்பாலும் அரச பஸ்களே சேதமாக்கப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து இந்த பஸ்களை இங்கு எடுத்து வர சாரதிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து பிரஸ்தாப பஸ்கள் 13 ஐயும் இரண்டு இரண்டாக இங்கு எடுத்வர நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் மேற்படி பஸ்கள் ஒன்றாக சேதமடையக் கூடிய சந்தர்ப்பத்தை தவிர்த்து விடலாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார். (உ-9)

## இந்து பாலர் பாடசாலை

மானிப்பாய், அக். 16

சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஞாபகார்த்தமாக சைவ ஆசார முறைப்படியான இந்து பாலர் பாடசாலை ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி விஜயதசமி தினத்தன்று ஆரம்பிக்கப்படஉள்ளது.

---

## விவசாய அபிவிருத்திச் 'சபை

யாழ்ப்பாணம் அக் 16

யாழ்ப்பாணத்தில் விவசாய அபிவிருத்திச் சபை என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓய்வு பெற்றுள்ள தமிழ் விவசாய உயர் அதிகாரிகள் ஒன்றிணைந்து இந்த அமைப்பை ஏற்படுத்தாயிருக்கிறனர்.

ஒய்வு பெற்ற விவசாய பிரதிப்பணிப்பாளர் திரு. எஸ். கனகரெத்தினம் இதன் காப்பளராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஐ. நா. சனப உணவு விவசாய நிறுவனத்தின் முன்னை நாள் விவசாய நிபுணர் கலாநிதி ஜே. சிதம்பரநாதன் இந்த அமைப்பின் தலைவராவர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் விசாய வளர்ச்சியை ஊக்குவிப்பதை இந்த அமைப்பு முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

வடக்கிலும் கிழக்கிலும் விவசாய அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக நிதி உதவிகள், நன்கொடைகள் முதலியவற்றைப் பெற்று அவற்றை உரிய முறையில் பயன் படுத்துவதையும் இந்த அமைப்பு ஒரு பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறது (இ-ஐ)

---


# பொருத்தமான தொழில் நுட்பம் (Appropriate Technology)

எமது நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபாடும், ஆர்வமும் உள்ள அறிஞர்கள், பொருத்தமான தொழில்நுட்பக் கொள்கைகள் பற்றி அறிய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்

தில்லைநாதன்,
121 பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(7030)



## Computer Programming in Basic

Duration - 2½ Months
Week day Batch (Tue & Wed 11-30a.m.)
Commencing on: 18-10-88
1st Instalment : Rs 400/- Only
Practicals on IBM & other Computers
Valuable Certificate will be awarded

IDP
Institute of Data Processing
K. K. S Road (சிவன்கோவிலடி)
யாழ்ப்பாணம்

● தெல்லிப்பளை கிளையில்
17-10-88 (3-30 மணிக்கு) ஆரம்பமாகும்

(7196)



# புஸ்பா ரான்ஸ்போட்

உங்கள் பொதிகளை பாதுகாப்பாகவும் விரைவாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் கொண்டு செல்வதற்கு

நாடுங்கள்:

## புஸ்பா அன் கோ

101, மானிப்பாய் ரேட்,
யாழ்ப்பாணம்.

கொழும்பில்:

புஸ்பா அன் கோ
162, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 13.

(C/590)



## யா / நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

# 1989 ஆம் ஆண்டு 6 வகுப்பிற்கான பிரவேசப் பரீட்சை

- விண்ணப்ப முடிவுதிகதி: 31-10-88
- பரீட்சைத் திகதி: 05 - 11 - 88

பரீட்சைப் பாடங்கள்:

கணிதம் காலை 9.00 - 10.00
தமிழ் காலை 10.15 - 11.15

பரீட்சைக் கட்டணம்: ரூபா10/-

விண்ணப்பப்படிவம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

எஸ். ரேய்காந்தராஜ்
(அதிபர்)

(C 606)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் ஹரிகரன்

கொக்குவிலைச் சேர்ந்த கருணாகரன் நாகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஹரிகரன் (16-10-88) இன்று ஞாயிறு தனது முதலாவது பிறந்தநாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், அன்ரிமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், நண்பர்கள், உறவினர்கள் புங்கைநகர், கண்ணகை அம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டுவாழ வாழ்த்துகின்றார்கள்.

V. C. க்கு முன்னால் கொக்குவில்.

(7044)



# புதிய தொழிற் பயிற்சி நெறிகள்

- Radio T. V. & Deck
- Air Condition & Refrigeration
- Motor Winding
- House Wiring

செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய துரித வகுப்புக்கள்

இவற்றுடன்

தொழில் நுட்பத் துறையில் London தராதரத்திற்குரிய City & Guilds (சகல பிரிவுகளும்) வகுப்புக்களும்

ஆரம்பம்: 15. 10. 1988

உங்கள் பதிவுகட்கு:

## North Ceylon Technical Institute

14, St. Peter's Lane
JAFFNA.

(C/583)



J. M. J.

# உங்கள் பயண அமைப்பாளர்




கனடா ★ ஜெர்மனி ★ இத்தாலி ★ சுவிஸ் ★ பிரான்ஸ்

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். ஒவ்வொரு வாரமும் எமது குழுக்கள் இறைவன் நல்லருளுடன் மேற்படி நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

1. கனடா, லண்டன், பிரான்ஸ், கிறீஸ், ஓமான், அபுதாபி, சிங்கப்பூர், குவைத், ஜோர்தான், லெபனான், சைப்ரஸ்
   வீட்டு வேலைப் பணிப்பெண்கள்

2. சவூதி அரேபியா
   சவூதி அரேபியாவில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் CLEANERS உடனடியாகத் தேவை
   சம்பளம்: 450 SR
   ஓவர்டைம், உணவு, இருப்பிடம் இலவசம்.

3. குவைத் நாட்டில்
   ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக CLEANERS ஆகப் பணியாற்றுவதற்கு விரும்புகிறீர்களா?
   சம்பளம்: குவைத் டினார்கள் 35

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 603)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை நாணயத்தின் சின்னம் - ஷப்ரு



# கூர்ந்து கவனியுங்கள்!

## 'ஷப்ரு'வின் புதிய வட்டி வீதங்களை

## கூர்ந்து கவனியுங்கள்!!

## முழுத் திருப்தி தானே கிடைக்கும்!!!

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

#### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும், அபரிமிதமான வளர்ச்சியும் உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன. வங்கியியலிலும் நிதியியலிலும் சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன் அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

#### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி விதங்களுடன் பல்வேறு விசேட சலுகைகளையும் வசதிகளையும் வழங்குகின்றது. உங்கள் தேவைக்கேற்ப வட்டியை மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில் பணமாகவோ, காசோலையாகவோ அன்றி வங்கிக்கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

#### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே எமது பிரதான நோக்கமாகையால் அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து திறமையான சேவைகளை வழங்குகின்றோம்.

#### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B., (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B., (Lond.), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons.)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SU

## SHABRA UNICO FINANCE LIMITED

61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL. 589310, 500576.

## ஷப்ரு யுனிக்கோ பினுன்ஸ் லிமிட்.

யாழ் முகவர்: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**துரையப்பா நவரட்ணம்**

(முன்னை நாள் தபால் அதிபர் - சுன்னாகம்)

பிறப்பு: 24- 8- 1927 — இறப்பு: 16- 10- 1987

எங்களை ஆருத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இன்றைய தினத்தில் பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்;

மனைவி; புஸ்பராணி
மகள்: சாயி
சகோதரிமார், உற்ருர், உறவினர்

'ராணி வாசா'
சோடாக் கொம்பனி
ஒழுங்கை,
மல்லாகம்.

(7009)

## 91 ஆம் நாள் நினைவஞ்சலி



**இராசு சிவாகரன் (சிவா)**

தமிழ்த் தாயின் மடியில்: 19-2-1968 — அநியாய அழிப்பு: 15-7-1988

நெஞ்சிருக்கும்வரை எம்மனதில் நிறைந்திருக்கும் சிவாவே! நெஞ்சைவிட்டு என்றுமே உனது நினைவு அகலாது. கல்மனம் கொண்டோர் காட்டிக் கொடுத்தனரோ. உடல் அழிந்து போனலும் உயிருக்குயிராக திடமாக நின்று எங்கள் துயரங்களைத்தீர்த்து வைப்பாயாக.

உன் பிரிவால் கண்ணீரில் தவிக்கும்

குடும்பத்தினர்.

40, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/587)

## முதலாம் வருட நினைவஞ்சலி



**திரு. கதிர்த்தம்பி சிவபாதசுந்தரம்**

தோற்றம்: 27- 7 1927 — மறைவு: 17- 10- 1987

எம்மை எல்லாம் ஆருத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! இறைவன் திருவடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களினுல் அஞ்சலியைச் செலுத்துகிருேம்.

தகவல்:
சி. பாலச்சந்திரன்
'கப்பல் வளவு'
சுன்னுகம்.

துயருறும்:
மனைவி, மக்கள்
மாமியார், சிறியதாய்,
பேரப்பிள்ளைகள்.

(7193)

அமைதியின்மையை அடுத்து

# தென் பகுதியிலிருந்து பல மூளைசாலிகள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், அக். 16

நாட்டின் தென் பகுதியிலிருந்தும் மூளைசாலிகள் பலர் தற்போது வெளிநாடுகளுக்குச் செல்ல ஆரம்பித்து விட்டனர் என்று கூறப்படுகிறது.

அண்மைக் காலமாக தென் பகுதியில் ஏற்பட்டுள்ள கலவரங்கள் அமைதியின்மை ஆகியவற்றை அடுத்தே சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர ஆரம்பித்து விட்டனர் என்று கூறப்படுகிறது.

டாக்டர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்பட பலதுறைகளையும் சேர்ந்த மூளைசாலிகள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு ஆயத்தங்களை மேற் கொண்டுள்ளனர்.

இதேவேளையில் தென் பகுதியில் ஏற்பட்டிருக்கும் கலவரங்கள் அமைதியின்மை ஆகியவற்றை அடுத்து வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகையிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த மந்த நிலை நாட்டின் அபிவிருத்தியைப் பாதிப்பதுடன் இலங்கை மக்களின் கல்வி, பொருளாதார, சுகாதார சமுதாய வாழ்க்கையையும் பெருமளவு பாதிக்கும் என்று நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (இ-ஐ)

## யூ. கே. சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

யாழ்ப்பாணம், அக். 16

திருநெல்வேலி சிவராஜா அவென்யூவில் அமைந்திருக்கும் யூ. கே. சிறுவர் பாதுகாப்பு நிதியம் தாய், தந்தையரை இழந்த 18 வயதுக்குக் குறைவான பிள்ளைகளுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் விதமாக தகவல்களைச் சேகரித்து வருகிறது. (இ - ஐ)

# முறைசாராக் கல்வி பற்றி விசேட கருத்தரங்கு

### கல்வித் திணைக்களம் ஏற்பாடு

யாழ்ப்பானம், அக். 16

முறைசாராக் கல்விப் பிரிவு நடத்தும் அதிபர், போதனுசிரியர், ஒழுங்கு படுத்தும் போதனுசிரியர் ஆகியோருக்கான விசேட கருத்தரங்கு ஒன்றை யாழ். கல்வித் திணைக்களம் நடத்தவிருக்கிறது.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் கருத்தரங்கிற்குத் தலைமை வகிப்பார்

இந்தக் கருத்தரங்கில் நேரடியாகக் கலந்து கொள்ளும் படிபாடசாலை அதிபர்களிடம் கேட்கப் பட்டிருக்கிறது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வோர் பின்வரும் பொருட்களை எடுத்து வரவேண்டும் என்றும் கேட்கப்பட்டிருக்கிறது.

★ நிரந்தர கருவி உபகரணப் பதிவுப்புத்தகம்.

★ மூலப் பொருள் பதிவேடு

★ வரவு செலவு கணக்குப் புத்தகம்.

★ முறைசாராக் கல்வி பற்றிய கோவையும், சம்பவத் திரட்டுப் புத்தகமும்.

★ மாதாந்த அறிக்கைக் கோவை.

★ மாணவர், ஆசிரியர் இடாப்பு.

★ பாடத்திட்ட வேலைத்திட்ட பதிவுப் புத்தகம்

★ 1988 இல் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி பற்றிய முழு விவரமும். இதுவரை நடைபெற்ற வகுப்புகளின் மாதாந்த அறிக்கையும் பெறுபேறுகளும்.

★ தங்கள் பாடசாலையில் இப் பிரிவை நடத்தும் தொழில் கூடத்தில் உள்ள உபகரணங்கள் பற்றிய விவரங்கள். (உ-9)

சனசமூக நிலையங்கள்

# சிறுவர் கலவி வளர்ச்சிக்கும் ஊக்குவிப்பு வழங்க வேண்டும்

யாழ்ப்பாணம். அக் 16

''சனசமூக நிலையங்கள் மக்களுக்கு பத்திரிகைகளை மட்டும் வாசிப்பதற்கு வழங்காமல் - சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஊக்குவிப்பு வழங்கவேண்டும்.

ஞானவீரசங்க சனசமூக நிலையத்தின் 44ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய தலைவர் திரு. க. ம. இராசேந்திரன் இவ்வாறு கூறினுர்.

இப்பொதுக் கூட்டம் அண்மையில் ஞான வீரசிங்க சனசமூக நிலைய பாலர் பாடசாலையில் நடைபெற்றது.

திரு இராசேந்திரன் மேலும் பேசுகையில் 'எமது நிலையம் பத்திரிகை வாசிப்பதுடன் இருக்காமல் சிறுவர்களின் கல்வி வசதியையும் அங்கத்தவர்களுக்கு கடன் திட்டம், அபிவிருத்தித் திட்டங்களையும் செய்துவருகிறது' என்ருர்.

திரு. த. பரமநாதன் பேசுகையில் 'அபிவிருத்தித் திட்டங்களை ஊக்கப்படுத்துவது அங்கத்தவர்களின் ஒற்றுமை முயற்சியில்தான் தங்கியிருக்கிறது' என்ருர்.

திரு. சத்தியமூர்த்தி பேசுகையில் 'எமது சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்துக்குச் சிலதிட்டங்களைச் செயல்படுத்த நாம் தயாராக இருக்கிருேம்' என்ருர்.

இதேவேளை கடந்த வருடம் நடைபெற்ற ஜீ. சி. ஈ சாதாரண / உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தலா 250 ரூபா, 150 ரூபா வீதம் காசோலைகளும் வழங்கப்பட்டன.

கூட்டமுடிவில் நடப்பு ஆண்டு நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-10)

சட்டத்தரணிகள் சங்கத்தை

# எதிர்த்து எச். டபிள்யு நீதிமன்றத்தில் ஆஜராகுவாரா?

இலங்கைசட்டத்தரணிகள் சங்கத்துக்கு எதிராக பொலிஸ் திணைக்களம் தாக்கல் செய்யவுள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கில் பொலிஸார் சார்பில் பிரபல சட்டத்தரணி டாக்டர் எச் டபிள்யூ ஜெயவர்த்தனவை ஆஜராக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எச். டபிள்யூ ஜெயவர்த்தன ஜனதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரிடம் பொலிஸ் மா அதிபர் கோரிக்கை ஒன்று விடுத்திருக்கிருர்.

பொலிஸாருக்காக சட்டமா அதிபரை நெறிப்படுத்துவைக்கும் படியும் பொலிஸ் மா அதிபர் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்டுள்ளார். (உ-எ)

## சம்பள உயர்வு டிசம்பரில்

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வின் இரண்டாம் கட்ட அதிகரிப்பு டிசம்பர் மாதச் சம்பளத்துடன் வழங்கப் படவுள்ளது.

முன்னர் இச் சம்பள அதிகரிப்பை அடுத்த ஆண்டு ஜனவரி மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கவே திட்டமிடப் பட்டு இருந்தது.

ஊக்குவிப்பு நடவடிக்கை

# கமநலசேவை பிரிவுக்கு ஆறு உழவு இயந்திரங்கள்

மானிப்பாய். அக். 16

ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர் வாழ்வு ஸ்தானிகராலயம் யாழ்ப்பாண மாவட்ட கமநலசேவைகள் நிலையத்துக்கு ஆறு புதிய உழவு இயந்திரங்களை வழங்கியுள்ளதாக யாழ். மாவட்டக் கமநல சேவைகள் உதவி ஆணையாளர் திரு. என். பரமலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் நிலையம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு ஊக்குவிப்பு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு பல்வேறு ஸ்தாபனங்களும் உதவி அளித்து வருவதாகவும் உதவி ஆணையாளர் திரு என் பரமலிங்கம் தெரித்தார்

இதற்காகவே ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு ஸ்தானிகராலயம் அண்மையில் ஆறு உழவு இயந்திரங்களை வழங்கியுள்ளதாக அவர் சொன்னுர்.

இவை சுமார் 24 லட்சம் ரூபா பெறுமதி மிக்கவை. இந்த இயந்திரங்கள் விரைவில் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளன. குறைந்த கட்டண வாடகைக்கு இந்த உழவு இயந்திரங்களை விவசாயிகள் பெற்று உபயோகிக்க முடியும் என அவர் மேலும் கூறினுர்.

அடுத்த ஆண்டும் இதே போன்று அதிக அளவிலான விவசாய உபகரணங்களை வழங்க ஐக்கியநாடுகள் அகதிகள் புனர்வாழ்வு ஸ்கானிகராலயம் சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் அவர் சொன்னுர். (உ- 90)

## கல்வித் திணைக்கள வெளியீடு

யாழ்ப்பாணம், அக் 16

கல்வித் திணைக்களத்தினுல் 'தொழில நுட்பம்', 'முறைசாராக்கலவி' என்ற இரு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நூல்களைப்பெற விரும்பும் சனசமூக நிலையங்கள் தமது கடிதத் தலைப்புகளில் விண்ணப்பங்களை யாழ் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

கல்விப் பணிப்பாளர் விளக்கம்

# அபிவிருத்தி வேலைகளுக்கு 18 வீத நிதியே ஒதுக்கீடு

மானிப்பாய், அக். 16

'யாழ்ப்பாண பிராந்தியக் கல்வித் திணைக்களத்துக்கு கிடைக்கும் நிதியில் 82வீதம் ஆசிரியர்களுக்கும் பிற ஊழியர்களுக்கும் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. மிகுதி 18சதவீத நிதியே கட்டடங்கள், தளபாடங்கள் போன்ற பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்கு செலவிடப்படுகிறன. இந்த நிலையில் ஒவ்வொரு பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளையும் நிறைவேற்றுவது கஷ்டமான காரியமாகும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையில் கூறினுர்,

மகாவித்தியாலய அதிபர் திரு. சோமசேகரம் அவர்கள் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். அவர் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

கல்வித் திணைக்களம் பெரிய பாடசாலைகளின் வளர்ச்சியை மட்டும் கருதாமல் அடுத்த மட்ட பாடசாலைகளின் அபிவிருத்திக்காகவும் நிதியை ஒதுக்க வேண்டும்.

எமது பாடசாலையில் கடந்த 25 ஆண்டுகளாக மாணவர் தொகை அதிகரித்து வருகிறது ஆனல் இதற்கேற்ற வசதி அதிகரிக்கப்படவில்லை. கல்வித்திணைக்களத்திலிருந்து நாம் அதிகம் எதிர்பார்க்கவில்லை. ஆசிரியர் பற்ருக்குறை, தளபாட கட்டட வசதிகள் ஆகியவற்றை மட்டும் நிவர்த்தி செய்து தருமாறு கோருகின்றேன்.

- இப்படி அவர் கூறினுர்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

மாணவர்கள், பாடசாலை, ரியூசன் என்று முழுநேரத்தையும் செலவிடுவதை விடுத்து தாமாக தமது பாடத்தைப் படித்து அறிய முயல வேண்டும். ஆசிரியரின் வழிகாட்டலுடன் சுயமுயற்சியாக அறிவைப் பெருக்க முற்பட வேண்டும். கிராமத்தின் சிறப்பு, பாடசாலைகளின் தரஉயர்வில்தான் தங்கியுள்ளது என்ருர்.

சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் தனஞ்செயன், ஷப்ரு, உதயன் சஞ்சீவி நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர் திரு. ஈ சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

திருமதி புஷ்பவதி சபாநாயகம் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினுர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன. (உ- 90)

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை

# கழிக்கப்பட்ட பஸ் வண்டிகளின் ஏல விற்பனை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினுல் கழிக்கப்பட்ட 29 பஸ் வண்டிகள் கோண்டாவில் சாலையில் இம்மாதம் 25 ஆம் திகதி (25-10-1988) செவ்வாய்க்கிழமை பகிரங்க ஏலத்தில் காலை 09. 30 மணி முதல் விற்பனை செய்யப்படும்.

பஸ் வண்டிகளைப் பார்வையிட விரும்புவோர் இம்மாதம் 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை கோண்டாவில் சாலை முகாமையாளரின் அனுமதியுடன் காலை 09. 00 மணி முதல் பிற்பகல் 03. 00 மணி வரையும் பார்வையிடலாம்.

எஸ். கனகரத்தினம்
தலைவர்/தகவுடை அதிகாரி.

தலைமை அலுவலகம்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை.
பலாலி வீதி,
கோண்டாவில்.

(C 394)

## ஓராண்டு நினைவஞ்சலி



**இராசதுரை சிவபாக்கியம்**

தோற்றம்: 17-11-1939 — மறைவு: 16-10 1987

திதி: 16-10-1988

காற்றுடன்காற்ருய் நீ கலந்து விட்டாய் அம்மா!
கூற்றுவனும் உன்னுயிரைக் கொண்டேகி விட்டானே!
ஏற்குமோ அவன் செய்கை? என்ன அநியாயமிது?
அதிர்ச்சி தரும் உன் பிரிவால் ஏங்குகின்ருேம் அம்மா!
உணர்ச்சி மிகு உள்ளங்கள் குமுறுகின்றது அம்மா!
வாயில் வார்த்தைகள் வருகுது இல்லை அம்மா!

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளை.

கலைவாணி வீதி.
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(7199)

## முதலாம் வருட நினைவஞ்சலி



**அமரர் சிவசுப்பிரமணியம் சிவசங்கர்**

(யாழ் மருத்துவபீட மாணவன்)

கனவுகளுடன் மண்ணில்:- 23-3-1967 — நனவாகாது விண்ணில்:- 16-10 1987

நண்பா!
நீ இன்று இல்லை
ஆனுல்
உனது கனவுகள், கதைகள் ....
கட்டடத்தின் ஒவ்வொரு
கட்டமும் எமக்குக்
கட்டியம் கூறுகின்றனவே!
பேசும் உனது கண்கள்
பொய்த்துவிட்ட போதினிலும்
பேசாது சென்ற உன்மொழி
மெய்யாகி விட்டதடா!
மருத்துவக் கடலினிலே
முத்தெடுக்க வந்தவனை
போதுமென்றே
காலன் உன்னைத்
தத்தெடுத்துச் சென்ருனே!
உன் ஆன்மாவுக்காக
ஆறுதல் செஞ்சும்

2ஆம் வருட மாணவர்கள்,
யாழ். மருத்துவபீடம்

(7251)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
நவில்தொறும் நூல்நயம் போலும்
பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு.

**பொருள்:**
பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல- 392/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 23078
16-10-1988 உ. வெ. இல. 88


## எப்போதும் தொடரும் என்று...?

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அடுத்த மாதம் 19 ஆம் திகதி நடைபெற உள்ளது. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களிலும் வாக்களிப்பு இருக்காது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் போட்டி இன்றியே தெரிவு நடைபெற்று விட்டது. அதனால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களிலேயே வாக்களிப்பு இடம்பெறப் போகிறது.

அம்பாறை மாவட்டம் சுமார் 25 வருட காலத்திற்குள் உருவாக்கப்பட்ட ஒன்று. டி. எஸ். சேனநாயக்கா காலத்தில் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் பெரும் எண்ணிக்கையில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றை உள்ளடக்கி, சிங்களவர் ஒருவரே எம். பி யாகும் விதத்தில் அம்பாறைத் தொகுதி உருவாக்கப்பட்டது. அதனால் பூர்விகமாக ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் அம்பாறைத் தொகுதியில் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டனர். எந்தக் கட்சியின் ஆதரவுடன் நின்றாலும், தமிழரோ முஸ்லிம் ஒருவரோ அம்பாறை எம்பியாகத் தெரிவு செய்யப்படுவது இயலாத காரியமாகும் விதத்தில் அந்தத் தொகுதி உருவாக்கப்பட்டது.

ஆனால் அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையினராக விளங்குபவர்கள் முஸ்லிம்கள், முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட கல்முனை மாவட்டம் ஒன்றை உருவாக்குமாறு அவர்கள் பல தடவைகள் முயன்ற போதிலும், சிங்கள அரசுகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

மற்றொரு புறத்தில் முஸ்லிம் மக்களின் ஆயிரக்கணக்கான புராதன—பூர்வீக வயல் நிலங்கள் தீகவாபி புனித பிரதேசத் திட்டம் என்ற பெயரில் அரசாங்க உடைமையாக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தின் இனவிகிதாசாரம் சிங்களவர்கள் பெரும்பான்மையினர் என்ற அளவுக்கு மாற்றப்பட வேண்டும் என்ற நோக்குடன் கடந்த பல வருடங்களாக அங்கு திட்டமிட்ட குடியேற்றங்கள் நடப்பது பரம இரகசியம்.

இத்தகைய ஒரு பின்னணியில் சூழ்நிலையில் முதல் முறையாக மாகாண சபைத் தேர்தல் நடக்கப்போகிறது. அதற்கு முன் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மணலாற்றுப் பகுதியில் இராணுவம் குவிக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

500 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வந்த விவசாயப் பண்ணை இம் மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் அவசர அவசரமாக ஸ்ரீலங்கா இராணுவ முகாமாக மாற்றப்படுவது ஏன்? பண்ணையில் தொழில் புரிந்த 150 தமிழ்க் குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டது ஏன்? விவாசயப் பண்ணையில் இராணுவ முகாம் நிறுவப்படுவதாகக் கூறிவிட்டு, சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதன் நோக்கம் என்ன?

எது எப்படி, எப்போது நடந்தாலும் மட்டக்களப்பில் மதுறு ஓயா, திருகோணமலையில் மகாதிவுல்வெவ (மகாவிளாங்குளம்) முல்லைத்தீவில் வெலி ஓயா, வவுனியாவில் கலவெவ, அம்பாறையில் மல்வத்தை என்று குடியேற்றத் திட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதை நிரூபிக்கவா இந்த அவசரம்?

## சீனாவும் பாகிஸ்தானும் சேர்ந்து புதிய டாங்கி தயாரிப்பு

இஸ்லாமபாத், அக். 15

சீனாவும், பாகிஸ்தானும் சேர்ந்து புதிய ரக யுத்த டாங்கி ஒன்றைத் தயாரித்து வருவதாகப் பாகிஸ்தான் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

இந்த டாங்கி இஸ்லாமபாத்துக்கு அருகில் உள்ள ஒரு தொழிற்சாலையில் கட்டப்பட்டு வருகின்றது.

இத்தகவலைப் பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஸ்லம் பேக் தெரிவித்தார் என்று அப்பத்திரிகை மேலும் கூறியது.

இப்புதிய முயற்சி பாதுகாப்பு நடவடிக்கையில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும்.

இந்த டாங்கியில் 105 மி மீ பீரங்கி பொருத்தப்படும்.

இதனிடையில் அமெரிக்காவின் 'எம்' ரக டாங்கிகளையும் போர்க்கள வாகனங்களையும் நவீனமயப்படுத்தும் திட்டத்தையும் பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளது.

அப்பத்திரிகையில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஏ)

பஞ்சாப் பாணியில்

# காஷ்மீரிலும் ஆயுதக் கிளர்ச்சி நடத்த தீவிரவாதிகளுக்கு வெளிச்சக்தி உதவி

## பிரதமர் காந்தி குற்றச் சாட்டு

ஜம்மு, அக். 15

பஞ்சாப் போன்று காஷ்மீரிலும் கிளர்ச்சிகளைத் தூண்டிவிட வெளிநாட்டுச் சக்திகள் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக இந்தியா குற்றஞ்சாட்டி உள்ளது.

ஆயுதப் பயிற்சி வழங்கிய பின்னர் தீவிரவாதிகளை அந்த வெளிநாட்டுச் சக்தி எல்லைப்புற வழியாக அனுப்பி வைப்பதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி குற்றஞ் சாட்டினார்.

அண்மையில் காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் ஆயுதங்களுடன் பாகிஸ்தான்-இந்தியா எல்லைப்புறத்தினூடாக ஊடுருவல் செய்கையில் இந்திய எல்லைப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அதைத் தொடர்ந்தே பஞ்சாப் பாணியிலான ஆயுதக்கிளர்ச்சி ஒன்றை காஷ்மீர் மாநிலத்திலும் நடத்த வெளிநாட்டுச் சக்திகள் முயல்வது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்திய-பாக் எல்லைப் புறப்பகுதியில் ஜம்மு பிரிவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்தார். (ஏ)

## எம். ஜி. ஆர் ஆட்சியை ஏற்படுத்த எனக்கு வாய்ப்புக் கொடுங்கள்!

### ஜானகி வேண்டுகோள்

தஞ்சாவூர், அக் 15

எம் ஜி. ஆர் விட்டுச் சென்ற பணிகளை தொடர எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். நான் ஆட்சிக்கு வந்தால் நல்ல பல திட்டங்களை செயல்படுத்துவேன். என்று அ. தி. மு. க. (ஜா) தலைவர் ஜானகி கூறினார்.

தஞ்சை மாவட்டத்தில் மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு உள்ள ஜானகி, வல்லத்தில் நடந்த கூட்டத்தில் பேசியதாவது:

''ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே! எம் ஜி ஆரின் மறைவுக்கு பின்னர் நடந்தது எல்லாம் உங்களுக்கு தெரியும். உங்களை எல்லாம் சந்திக்கவே நான் இங்கு வந்துள்ளேன். நான் உங்களிடம் வாக்குக் கேட்பதற்காக வரவில்லை. எம். ஜி. ஆர். வழியில் நல்லாட்சி அமைய பாடுபட்டு வருகிறேன்.

எம் ஜி. ஆர். விட்டு சென்ற பணிகளைத் தொடர எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். ஏழைகளின் நலனுக்காக எம் ஜி ஆர் எத்தனையோ திட்டங்களை தீட்டி உள்ளார். நான் ஆட்சிக்கு வந்தால் அவற்றை செயல்படுத்தி ஏழை மக்கள் பயன்பெற வழிவகை செய்வேன்

இவ்வாறு ஜானகி பேசினார். பின்னர் மருத்துவக் கல்லூரி, பிள்ளையார்பட்டி வழியாக அண்ணாசிலைக்கு வந்தார். அண்ணா சிலைக்கு அவர் மாலை அணிவித்தார். பின்னர் காந்திரோடு, ரயில்வே ஸ்டேஷன், அண்ணா நகர், பர்மா காலனி ஆகிய இடங்களில் பொது மக்களிடம் பேசினார். பல இடங்களில் ஜானகியை ஆராத்தி எடுத்து பெண்கள் வரவேற்றனர்.

பெயர் சூட்டுப்படி தன்னிடம் கொடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு ''ராமச்சந்திரன்'' என்று பெயர் வைத்தார். ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஆங்காங்கே ஜானகிக்கு சிறப்பாக வரவேற்பளிக்கப்பட்டது பல இடங்களில் அ. தி. மு. க. கொடியை ஜானகி ஏற்றி வைத்தார்.

அப்போது ஜானகி பேசியதாவது:

நான் கடந்த ஏழு மாதமாக எம் ஜி. ஆரை பிரிந்த துயரத்தில தவித்துக்கொண்டு இருக்கிறேன்

தமிழக அரசியலில் தேர்தல் நடக்கிறது. அதையெல்லாம் நீங்கள் பத்திரிகைகளில் படித்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதையெல்லாம் நான் ஒவ்வொன்றாக சொல்ல வேண்டியது இல்லை என்று கருதுகிறேன்.

எம் ஜி ஆர். உயிருடன் இருந்த பொழுது அவரது திட்டங்களை பாராட்டினார்கள், அவர் செய்த சேவைகளை புகழ்ந்தார்கள்.

அவர் இறந்த பின் இன்று ஏசியும், பேசியும் வருகின்றனர். யார் ஏசிப் பேசினாலும், தூற்றிப் பேசினாலும் எம் ஜி. ஆருடைய சேவைகளையும் எம். ஜி. ஆரையும் தமிழக மக்கள் மறக்க மாட்டார்கள்.

எம். ஜி ஆர் விட்டுச் சென்ற பணியை அவர் விட்டுச்சென்ற திட்டங்களை நான் தொடருவதற்கு எனக்கு வாய்ப்பளியுங்கள்'

இவ்வாறு ஜானகி கூறினார்.

புதுப்பட்டியில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது ஒரு கிழவி 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி'' என்ற பாட்டை பாடினார். (ஏ-4)

## எய்ட்ஸ் நோயாளி ரஷ்யாவில் மரணம்

மாஸ்கோ. அக். 15

சோவியத் யூனியனில் எய்ட்ஸ் நோயாளி ஒருவர் முதன் முதலாக உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த நபர் உயிரிழந்து ஒரு மாதம் சென்ற பின்னரே அச் செய்தியை பத்திரிகை மூலம் சோவியத் சுகாதார அமைச்சு அறிந்து கொண்டது.

இறந்தவர் ஒரு பெண். தகாத நடத்தையில் ஈடுபட்டு வந்தார். அவர் இறந்த பின்னரே அவர் எய்ஸ்ட்ஸினால் உயிரிழந்தார் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. (ஏ)

## உணவு உற்பத்தியில் அமெரிக்கா 2ஆவது இடம்

வாஷிங்டன் அக். 13

இந்த ஆண்டில் ஏற்பட்ட வரட்சி காரணமாக உணவு உற்பத்தியில் அமெரிக்கா இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டது

சோவியத் யூனியன் உணவு உற்பத்தியில் முதலாவது இடத்தில் இருக்கிறது.

உணவு உற்பத்தியில் அமெரிக்கா வீழ்ச்சி கண்டது இதுவே முதற் தடவையாகும் என்று உலகக் கண்காணிப்பு நிறுவனத் தலைவர் திரு. லெஸ்டர் ஆர். பிரவுண் தெரிவித்தார்.

உலகப்பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சி நிறுவனமாக இது விளங்குகின்றது (ஏ)

### குண்டு வீச்சு

பெசன்சொன், அக்.15

பிரான்ஸில், பிரச்சினைக்குரியதாகக் கருதப்படும் கிறிஸ்துநாதர் படம் திரையிடப்பட்ட தியேட்டருக்குக் குண்டு வீசப்பட்டது.

## பிலிப்பீன்ஸில் அமெ. தளங்கள்

வாஷிங்டன், அக் 15

அமெரிக்காவின் கடற்படைத் தளங்கள் பிலிப்பீன்ஸ் நாட்டில் தொடர்ந்து வைத்து இருப்பது தொடர்பாக இரண்டு நாடுகளுக்கும் இடையே உடன்பாடு ஒன்று ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

தளங்களை வைத்திருப்பதற்கு குத்தகையாக ஆண்டு தோறும் 1 500 மில்லியன் டாலர் பணம் வழங்க அமெரிக்கா உடன்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

### ஜெலிக்னைற் கண்டுபிடிப்பு!

சென்னை அக் 15

ராமேஸ்வரம் ரயில் நிலையபார்சல் அறையில் 400 ஜெலிட்டின் குச்சிகள் கொண்ட இரண்டு பார்சல்களை பாதுகாப்பு அதிகாரிகள் நேற்றுக் கைப்பற்றினர்.

சவர்க்காரம் என்று அப்பார்சல்கள் மீது லேபல் இடப்பட்டிருந்தன.

சென்னை - இராமேஸ்வரம் மெயில் ரயிலில் இப்பார்சல்கள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தன. (ஏ)

### நிதி உதவி

மாஸ்கோ, அக் 15

ஆப்கனிஸ்தான் அகதிகளின் புனர்வாழ்வுக்கு சோவியத் யூனியன் 500 மில்லியன் டாலர் நிதி உதவி செய்யப்போவதாக அறிவித்திருக்கிறது. [ஏ]

## பர்மாவில் புதிய அரசியல் கட்சி மாணவர்கள் ஆரம்பித்தனர்!

ரங்கூன் அக்- 15

பர்மாவில மாணவர் அமைப்புக்கள் அனைத்தும் சேர்ந்து அரசியல் கட்சி ஒன்றை ஸ்தாபித்துள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இக்கட்சியும் தேர்தலில் போட்டியிடும் என்று மாணவர் அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

இதனிடையில் அடுத்த மாத முற்பகுதிக்குள் பொதுத் தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தல் கமிஷன் தலைவர் அறிவித்திருக்கிறார்.

தேர்தலை நடத்துவது சம்பந்தமான பூர்வாங்க அலுவல்களை மேற்கொள்ளுவதற்கு குறைந்தது 6 மாதங்கள் தேவைப்படுகிறது என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

26 ஆண்டுகள் தேர்தலே நடைபெறாத ஒரு நாட்டில் தேர்தலை நடத்துவது என்பது மிகவும் சிக்கலான காரியம் தான் என்பதை பிரதான அரசியல் கட்சிகள் ஒத்துக் கொண்டுள்ளன. (ஏ)

## வல்லான் வகுத்த வழிமுறை; அதற்கு மாற்றம் தேவைதானா?

'அறிவுக்கே முதன்மை வேண்டும்' என்ற தலைப்பில் கடந்த 11 ஆம் திகதி உதயனில் டலர் ஈழத்துச் சிவானந்தன் கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது.

கல்வித் தெய்வமாகிய சரஸ்வதியின் வழிபாடே நவராத்திரி வழிபடுகளில் முதன்மை பெற வேண்டும் என்றும்—

முதல் மூன்று நாட்களையும் சக்தி தெய்வத்துக்குரிய நாட்களாக முதன்மைப்படுத்தி வழிபடுவது குறித்து சிவநெறி அறிஞர்கள் ஆராய வேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக திரு வே தியாகராஜா எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது. (ஆ)

'அறிவுக்கே முதன்மை வேண்டும்' என்ற கருத்தை எவரும் மறுக்க மாட்டார்.

வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பார்கள் வழிமுறை தெரியாதவர்கள் வகுத்த வாய்க்கால் நீண்டகாலம் நிலைக்காது.

முறை பிறழாது நீண்ட காலம் நிலைத்து வரும் விழா நவராத்திரி விழா.

திருவருட் சத்திய கிய பராசக்தியை வழிபட்டு கொண்டாடும் விழாக்களில் நவராத்திரி தலை சிறந்தது.

புரட்டாதி மாதத்து வளர்பிறைக் காலப் பிரதமை தொடங்கி ஒன்பது இரவுகளைக் கொண்டது நவராத்திரி.

முதல் மூன்று இரவுகளிலும் துர்க்கா தேவியை வழிபட்டு வீரத்தைப் பெறவும் மற்றைய மூன்று இரவுகளிலும் இலக்குமி தேவியை வழிபட்டு செல்வத்தைப் பெறவும், இறுதி மூன்று இரவுகளிலும் சரஸ்வதி தேவியை வழிபட்டு கல்வியைப் பெறவும் வகுத்துள்ளனர்.

வீரம், செல்வம், கல்வி மூன்றும் உடல் வளர்ச்சிக்கும், உயிர் வளர்ச்சிக்கும் அத்தியாவசிய தேவைகளாகும் அன்னை பராசக்தியும் வேண்டுவார் வேண்டுவதை ஈய்ந்தருளுகின்றாள்.

உயிர். இருள் நீங்கி நல்லறிவைப் பெற்று வழமாக வாழும்வழியை நம் முன்னோர் முறை [illegible] தெளிந்தார் தெளிவாக அமைத்த இந்த முறைக்கு மாற்றம் எதற்கு?

இறையோடு அபின்னமாய் விளங்கும் அந்தப் பராசக்தியின் அருளால் தான் உயிர் இவ்வுலகில் உடம்பைப்பெற்று வாழ்கிறது. உடம்பைப் பெற்றதும் உயிர் அறிவைப் பெறுகிறது. பெறும் அறிவு உயிரைப்பற்றிய இருள் நீக்கத்துக்கும். மெய்ப்பொருளை உணர்வதற்கும் உறுதுணையாய் இருத்தல் வேண்டும்.

பெற்ற அறிவு நல்லறிவாய் மலரவேண்டும் எப்படி?

தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையில் நடைபெறும் யுத்தங்கள் பற்றி புராணங்கள் நிறையக் கூறும். அசுரர்கள் புரியும் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் தங்கள் இடர்களைத் தீர்த்தருளுமாறு இறைவனை வேண்டுவர் இறையருளால் இடர்களும் நீங்கும்.

அந்தத் தேவ அசுர யுத்தத்தை உடம்பில் நிகழும் உணர்வுகளோடு வைத்துச் சிந்திக்கலாம். மனித உடலில் பல்கிப் பெருக்கெடுக்கும் உணர்வுகள் மிருக உணர்வுகள். [illegible]வை [illegible]த்திருப்பது மகிடாசுரன் என்ற எருமை முகமுடைய அரக்கன்; அசுரன் நல்லெண்ணங்களாகிய தேவர்களைத் தலையெடுக்க விடான. அந்த அரக்கனை அழித்தெழிக்க வல்ல வலிமையை, சக்தியை, வீரத்தைத் தந்தருள வேண்டுமென்று சாவலமை பொருந்திய ஈஸ்வரி துர்க்கா தேவியை முதலில் வணங்குவது தானே முறை!

அந்தத் திருவருள் வலிமை பெற்ற உயிர் தீய உணர்வுகளை அழித்தொழிக்க, நல்லுணர்வுகள் உள்ளத்தில் பல்கிப் பெருகும்.

தொடர்ந்து இலட்சுமி தேவியைப் பூஜிக்கச் சகல செல்வங்களும் தானாகவே வந்தடையும். அந்தச் செல்வச் செருக்கில மாளாமல் சரஸ்வதி தேவியைப் பூஜிக்க, வெள்ளைத் தாமரை மலராகிய உள்ளத்தில விருப்போடு வீற்றிருந்து சகல கலை ஞானங்களையும் தந்தருளுவாள்

திருவருளைப் பூஜித்து வீரம், செல்வம் கலை ஆகிய செல்வங்களைப் பெற்று நலவாழ்வு வாழ்வோமாக.

### உறுப்பினர் தெரிவுக் கூட்டம்

தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்க நெறியாளர் குழுவுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் விசேஷ கூட்டம் இம் மாதம் 24ஆம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெறும் [இ-68]

## எதைப் பேசுவதுஎன்று அறிந்து பேசவேண்டும்

### பாதயாத்திரையின் போது உரை

பானிப்பாய் அக் 16

நாம் ஆரம்பித்துள்ள இச் சிறு யாத்திரை பெரிய ஒரு யாத்திரைக்கான அத்திபாரம். உலக ஜீவராசிகளுள் சிரிக்கவும், பேசவும் தெரிந்தது மனிதனுக்குத்தான் இச் சிறப்பைப் பெற்ற மனித இனம் எதைப் பேசுவது என்று அறியாமல் உள்ளது. 'சொல்லுநா நமசிவாயவே' என்ற மந்திரத்தை உச்சரித்து பிறவிப் பெருங்கடலை நீந்துவோம்

தமிழ் இனத்தின் விடுதலை, சுபீட்சம், அமைதி வேண்டி வலிகாமம் தெற்குப் பகுதியில் ஸ்தல யாத்திரை மேற்கொண்ட ஆதமஜோதி முத்தையா குழுவினருக்கு உடுவில் சற்பொக்கணை விநாயகர் ஆலயத்தில வரவேற்பு அளிக்கப்பட்ட போது திரு. நா. முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி ஆலய கர்த்தா பிரம்மஸ்ரீ வை. யோகீஸ்வர ஐயர் பாதயாத்திரைக் குழுவினரை வரவேற்று சாளரஞ்சி கொடுத்துக் கௌரவித்தார்.

பாதயாத்திரையில் கலந்துகொண்ட உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. அ மகாலிங்கம் கூறியதாவது:- இன்று தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பம் அனுபவித்து ஆறுதல் தேடி அலைகின்றனர்.

தம் கஷ்டம் நீங்கி அமைதி ஏற்பட இறை வழிபாடும், திருமுறை ஓதுதலும் ஆண்டவனை பிரார்த்திப்பதுமே சிறந்தது என உணர்ந்துள்ளனர்

இந்நோக்கத்தை அடையப் பெரியார் முத்தையா காட்டும் வழியில் நாம் சென்று அமைதி காண்போம்.

இப்படி அவர் கூறினார்.

சந்தரோடைக் கிராம சேவையாளர் திரு எஸ் செல்லமயிலும் சற்பொக்கணை விநாயகர் ஆலயத் தொண்டரும் சலைமதி சனசமூக நிலையப் பொருளாளருமான திரு கனகசிவன் ஆகியோரும் உரையாற்றினர் (ச-90)

### நியமனம்

குருநகர் அக் 16

கைதடி, அரசினர் முதியோர் இல்லத்தில் முன்பு கடமை புரிந்து வேறிடத்துக்கு மாற்றலாகிச் சென்ற டாக்டர் எஸ் குணரத்தினம் மீண்டும் மேற்படி இல்லத்திறகு நிரந்தர வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டார். (த-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேட்டிங்ஸ் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.



# உதயன்

16 - 10 - 1988 ஞாயிற்றுக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுர ✶ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.


## நீதியான பாரபட்சமற்ற தீர்வு ஒன்றே காணப்பட வேண்டும்

### யாழ். நற்சமூக நடு நிலையம் பிரதமர் ராஜீவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், அக், 16

வழமையான ஜனநாயக நடைமுறையை செயல்படுத்துவதற்கு முன், பேச்சுவார்த்தை களைத் தொடர்ந்து நீதியான பாரபட்சமற்ற தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமென்று தமிழ் சமுதாயத்தின் பெயரில் கேட்டுக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் நற்சமூக நடு நிலையம் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு இவ்வாறு கோரிக்கை விடுத்து கடந்த 12 ஆம் திகதியிட்டு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அண்மையில் இந்திய அமைதிப் படை வீரர்கள் இருவரை விடுவித்த செய்கையானது அவர்கள் இந்தியா மீது தொடர்ந்து காட்டி வரும் நல்லெண்ணத்தையும், அவர்கள் உங்களுடன் இணைந்து செயல்பட்டு நீதியான ஒரு தீர்வைக் காண்பதற்கு விருப்பமாயிருக்கின்றனர் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடிதத்தின் பிரதி ஒன்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. (இ-ஐ)

## 2 வருட சம்பள முற்பணம் கிராம சேவை அலுவலர்களுக்கும் வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 16

வடபகுதி அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவிருக்கும் இரண்டு வருட சம்பள முற்பணம் சகல கிராமசேவை அலுவலர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக மன்னார் மாவட்ட ஐக்கிய கிராம சேவை அலுவலர் சங்கம் அரசாங்க உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டிருக்கிறது.

சிங்களத் தேர்ச்சி இன்மை என்ற காரணத்தால் சேவையில் உறுதிப்படுத்தப்படாத ஊழியர்களுக்கு இக் கடன் வசதி கிடையாது என்ற ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதை அடுத்தே பிரஸ்தாப சங்கத்தின் தலைவர் திரு. எஸ். மரியதாசன், பொதுச் செயலாளர் திரு. ஈ. ஜே. ஜே. மிராண்டோ ஆகியோர் சகல கிராம சேவை அலுவலர்களுக்கும் சம்பந்தப்பட்ட கடன் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டிருக்கின்றனர். (இ-ஐ)

### சென். பீற்றர்ஸ் பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம், அக் 16

பேர்சிவல் ஹோல், கில்னர் ஹோல் ஆகியவற்றில் இயங்கும் சென் பீற்றர்ஸ் பாலர் பாடசாலைகள் நாளை திங்கள் முதல் வழமைபோல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பிரதமரின் "ரூ 2.500 திட்டம்" வெறும் தேர்தல் குண்டு

### முன்னாள் நிதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, அக்.16

உணவு முத்திரையில் வாழும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதாமாதம் 2ஆயிரத்து 500 ரூபா வழங்கப் போவதாகப் பிரதமர் பிரேமதாசா கூறுகிறார். இது வெறும் தேர்தல் குண்டு.

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் பதினொரு ஆண்டுகள் நிதி அமைச்சராகப் பணியாற்றிய திரு ரொனி டிமெல் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

முழு வரவு செலவுத் திட்டமே 8,500 ரூபா கோடி ஆகும் பிரதமரின் 2,500ரூபாத் திட்டத்தை அமுல்நடத்த 8.400 கோடி ரூபா தேவைப்படும்.

இத்திட்டத்தை அமுல் நடத்தினால் சம்பளம் வழங்க அரசிடம்பணமே இருக்காது. பிரதமரின் பேச்சு வெறும் தேர்தல் குண்டு ஆகும்.

நிதி பற்றிய அ,ஆ.இ கூடப்பிரதமருக்குத்தெரியாது. முட்டாள் தனமாகத் தான் கூட்டங்களில்பேசிவருகிறார்.

பிரதமரின் 10 லட்சம் வீடமைப்புத்திட்டத்தில் 20சத வீத வீடுகளேகட்டப்படவில்லை.

கடந்த 11 ஆண்டுகளில்தனியார்நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் வீடுகளும்பிரதமரின் திட்டத்தினுள் அடங்குகின்றன.

30 நிமிடங்களில் பட்ஜட் ஒன்றைத் தயாரிக்கப் போவதாகப்பிரதமர் கூறிவருகிறார். இதுநடக்கிற காரியமா?

பிரதமர் பிரேமதாசா ஜனாதிபதியானால், நிதி அமைச்சரோ, திறைசேரியோ நாட்டுக்குத் தேவைப்படாது; பணம் அச்சடிக்கும் இயந்திரம் ஒன்று தான் தேவைப்படும்.

இப்படி திரு.ரொனிடிமெல் சொன்னார்.

### தீ வைத்து நாசம்

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூர் நீலவத்தை கரைவலை மீன்பிடியாளர் சங்கத்திற்குச் சொந்தமான மீன்பிடித் தோணியும் அதனுடன் கூடிய மீன்பிடி வலைகளும் இனம் தெரியாத நபர்களால் தீவைத்து நாசமாக்கப்பட்டுள்ளன. (இ-14)


எமது நேற்றைய
மாபெரும் வெளியீடுகள்

1. தியாகராஜனின் புரட்சிப் படைப்பு
"ஊமைத்துரை"
✶ தியாகராஜன் ✶ கீதா
✶ சிவச்சந்திரன் ✶

2 "நெருப்பு நிலா"
✶ ராஜா ✶ ரஞ்சனி ✶ செந்தில்

குரு வீடியோ சென்ரர்
180, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(7305)


### "வணிகத் தளிர்" வெளியீட்டு விழா ஒத்திவைப்பு

யா/திருக்குடும்பக் கன்னியர்மட வணிக மாணவ மன்றத்தினரால் 17-10-88 திங்கட்கிழமை அன்று வெளியிடப்படவிருந்த "வணிகத் தளிர்" வெளியீட்டு விழாவானது பாடசாலைகள் நடைபெறாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது பிற்போடப்பட்ட திகதி பின்னர் அறிவிக்கப்படும் (7048)

### UNIVERSITY OF JAFFNA
### TENDER NOTICE

Tenders are invited from qualified contractors for the following works at University of Jaffna.

(1) Renovation work of the Science Faculty Common Room.

(2) Renovation work of the Dinning hall at Balasingam Hall.

Tenderers should be registered for Rs. 100,000/- or over for civil works with University of Jaffna.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna, before 28-10-88 at 10-00 a. m. on producing a receipt from Bursar, University of Jaffna for payment of non-refundable tender fee of Rs. 100/- for each tender.

The perfected tenders should be sent to reach on or before 04-11-88 at 10-00 a. m.

Tenderers are invited to be present for opening the tenders on the same day at 10-30 a. m.

Tender board of University of Jaffna reserves the right to reject any tender.

**Registrar,**
University of Jaffna
Thirunelvely.
Jaffna.

C/608

12 போராளிகள் கொல்லப்பட்டதை அடுத்து

## ஓமந்தை - இறம்பைக்குளம் பகுதியில் தேடுதல்

வவுனியா, அக்.16

ஓமந்தையில் - இறம்பைக்குளம் பகுதியில் 12 விடுதலைப் புலிகள் போராளிகள் கொல்லப்பட்டதை அடுத்து ஓமந்தை - நெடுங்கேணி பகுதிகளுக்கு உட்பட்ட பிரதேசத்தில் தேடுதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இத்தேடுதல் வேட்டைக்கென மேலதிக குர்க்காப் படையினர் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் தாண்டிக்குளம் பகுதியில் வீடு வீடாக இடம்பெற்ற தேடுதலின்போதுகிராமவாசிகள் அனைவரும் குறிப்பாக ஆண்கள், பொது இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு தலையாட்டி ஒருவரின் முன்னால் நிறுத்தப்பட்ட பின் விடுவிக்கப்பட்டனர். (இ-164)

### குருநகரில்

குருநகர், அக். 16

நேற்றுக் காலை 5 மணி தொடக்கம் 8மணிவரை சுமார் மூன்றுமணிநேரம் குருநகரில் ஒருபகுதி பலத்த சோதனைக்குள்ளாகியது.

மவுண்கார்மல் வீதி, பாங்ஷால் வீதி, சென் பற்றிக்ஸ் வீதி, தண்ணீர்த்தாங்கிவீதி, சென். செபஸ்ரியன் வீதி, டேவிற்வீதி, இராஜேந்திராவீதி, கடற்கரை வீதி ஆகியன சுற்றி வளைக்கப்பட்டு சந்தேகத்திற்கு இடமானவர்கள் சவக்காலைச்சந்தி சென் ரேக்ஸ் விளையாட்டு மைதானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (இ51)

## வடபகுதி தபால் சேவை வழமை நிலையில்

வவுனியா, அக் 16

கடந்த 4 ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்த வவுனியா தபால் அலுவலகம் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டு அலுவல்கள் நடைபெறுகின்றன.

ஒருவார காலமாக கொழும்பில் தேங்கிக்கிடந்த 300க்கும் மேற்பட்ட தபால் பொதிகள் புதனன்று விசேட பஸ் ஒன்றின் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டன.

அதேபோன்று அங்கு தேங்கிக்கிடந்த சுமார் 300 பொதிகள் வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டு வெள்ளி அன்று ரயில் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று தபால் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெள்ளி அன்றும் தபால் சேவைக்கென விசேஷ பஸ் ஒன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக இ. போ. ச வவுனியா டிப்போவின் உயரதிகாரிஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதனிடையில், ஒருவார காலமாக மூடப்பட்டிருந்த வவுனியா கச்சேரியும் திறக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. (இ-164)

## பாவற்குளம் பகுதியில் தொடர்ந்து பதற்றம்

வவுனியா, அக் 16

கடந்த 10 ஆம் திகதி மகாகோங்கஸ்கடவெ என்னுமிடத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பாவற்குளம் பகுதியில் இன்னும் பதற்றம் நிலவுகிறது.

பாவற்குளம் பழைய ஊருவ, ட்ரக்செவான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம், ஷெல் தாக்குதல்கள் காரணமாக மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர். ஷெல் பிரயோகத்தினால் வீடுகள் சேதமடைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது

பாவற்குளம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் யூனிட்டுக்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் கிராமங்களை விட்டு வெளியேறி அயல் கிராமங்களிலும் பூவரசங்குளம் பகுதியிலும் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

இதேவேளையில் கடந்த இரண்டு தினங்களாக இந்திய அமைதிப்படையினரும் இப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். (இ-164)

### பஸ்ஸில்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறக்கப்பட்டதாகக் கூறப்படும் ஏனைய நால்வர் பற்றிய விவரங்களும் தெரியவில்லை.

இதனிடையில் வவுனியாவிலிருந்து லொறி ஒன்றில் பயணம்செய்து தாக்குதலுக்கு உள்ளான இருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். (இ-164)

### பேராதனைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கொழும்பு, அக் 16

பேராதனைப் பல்கலைக் கழகமும் நேற்று முன்தினம் முதல் மூடப்பட்டது.

மறு அறிவித்தல் வரை மூடப்பட்டு இருக்கும் என்றுஉபவேந்தர் பேராசிரியர் அர்ஜுன் அலுவிஹார தெரிவித்தார்

நேற்றுமுன்தினம்மாலை 4 மணியுடன் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறி விடும்படி மாணவருக்கு உத்தரவிடப்பட்டது. (இ-எ)

### கொழும்பு.....

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

காரணமாகமே இந்த ரயில் சேவை இரத்துச் செய்யப்பட்டது.

எனினும் காலையில் ஆரம்பமாகும் கொழும்பு—வவுனியா ரயில் சேவை நேற்று வழமைபோல் நடைபெற்றது.

சரக்கு ரயில் ஒன்று மட்டும் நேற்று யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தது. (உ-10)

### கடவுச்சீட்டு யாருடையது?

யாழ்ப்பாணம், அக் 16

ஞானப்பிரகாசம் அனிக்லொட் என்பவரது கடவுச் சீட்டு கொக்குவிலில் கண்டெடுக்கப்பட்டு உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. கடவுச்சீட்டுக்குரியவர் உதயன் காரியாலயத்துக்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (இ-ஐ)

### இராஜினாமா

மட்டக்களப்பு பிரசைகள் குழு தலைவர் ஜனாப். எம். எஸ். அஸீஸ். செயலாளர் திரு செழியன் எஸ். பேரின்பநாயகம் ஆகியோர் தமது பதவிகளிலிருந்துஇராஜினாமா செய்துள்ளனர்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே பதவி விலகிக் கொள்வதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (இ 21)

### உணவுப் பொருள் விநியோகம்

தலைமன்னார்ப் பகுதியில் முகாமிட்டிருக்கும் இந்திய அமைதிகாக்கும் படையினர் அங்குள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 கிலோ தொடக்கம் 10 கிலோ வரை அரிசியும் 1 கிலோ தொடக்கம் 2 கிலோ வரை சீனியும், ½ கிலோதொடக்கம் 1 கிலோ வரை பருப்பும் வழங்கினர்.

இப் பொருள்கள் தலைமன்னார் துறைமுகத்திலுள்ள அவர்களின் முகாமில் வைத்து வழங்கப்பட்டன. (இ)

### ''இஸ்லாமிய ஆசிரியன்''

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் முதன் முதலாக ''இஸ்லாமிய ஆசிரியன்'' என்னும்பெயரில் மும்மாதச் செய்திமடல் ஒன்றை வெளியிட இருக்கின்றது.

இந்தச் செய்திமடலின் வெளியீட்டு விழா இன்று 16ஆம் திகதி கொழும்பு 'பாஷாவிலா' மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கக்கல்முனை மாவட்டக் கிளை இந்தச் செய்திமடலை வெளியிடும் பொறுப்பை ஏற்றுள்ளது. (இ-14)

## மரண அறிவித்தல்கள்

### S. C. கருணானந்தன்

முன்னாள் ஆசிரிய கலாசாலை அதிபரும், கல்வி அதிகாரியுமான S. C. கருணானந்தன் M. A. அவுஸ்திரேலியாவில் 7 - 10 - 88இல் காலமானார். இவர் கிருபாமணியின் அன்புக்கணவரும், சுகந்தி (California) தேவதயாளன் (Canada), கிருசாந்தி (U. K.) தேவமித்திரன் (U. S. A.) தமயந்தி (Australia) ஆகியோரின் தகப்பனாரும், அருளானந்தம் (இளைப்பாறிய ஆசிரியர்) கிருபைரத்தினம், செல்வானந்தம் (Engineer Australia). பரமானந்தம் (U. S. A) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆதர் கனகரத்தினத்தின் மைத்துனரும் ஆவார். உற்றார், உறவினர், சினேகிதர் இந்தத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. J. V. கனகரத்தினம்

(7304)

### திருமதி அந்தோனிக்கம் இராயப்பு

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தலைமையாசிரியர் வ. இராயப்பு அவர்களின் அன்பு மனைவி திருமதி அந்தோனிக்கம் இராயப்பு காலமானார்.

இவர் திரு. இ. எ. ஆனந்தராஜா (பிறேமா ரேடர்ஸ், நெல்லியடி), திருமதி ஆனந்தராணி ஜெயசிங்கம், அருட்செல்வி, புஸ்பராணி (கார்மேல் மடம், அடம்பன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. இ. அ. கனகராஜா (அரசகரும மொழித் திணைக்களம், கொழும்பு) அவர்களின் சிறிய தாயாரும், திரு. அ. இ. ஜெயசிங்கம் (சலால் பொறுப்பதிகாரி, பருத்தித்துறை), நிர்மலா கனகராஜா, பிறேமா ஆனந்தராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை (16-10-1988) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து குடும்ப சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
இ. எ. ஆனந்தராஜா
(மகன்)

சரஸ்வதி வித்தியாலய வீதி,
சரவெட்டி. (7308)

### சிதம்பரப்பிள்ளை நவரெட்ணம்
( இளைப்பாறிய P. W. D. ஓவசியர் )

சிதம்பரப்பிள்ளை நவரெட்ணம் 13-10-88 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் ஈமக் கிரியைகள் ( இன்று ) 16 – 10 – 88 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்திற்கு காலை 9.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி நவரட்ணமும் பிள்ளைகளும்.

"நவ வாசா"
ஆலடி
காரைநகர். (7263)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 16-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 16th October 1988


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org